# செந்தமிழ்ச்செல்வி







## உள்ளுறை


பெரும்புலவர் கா. ர. கோவிந்தராச முதலியார் ருசஎ

அந்தக்காலம்

கழற்சிங்கன் யார்? ருருசூ

புதியன புகுமேல்! ருசூஉ

தமிழ் நெடுங்கணக்கு ருஎக

தமிழ்நாட்டு விளையாட்டு ருஎரு

தமிழ் மலர் ருஅ0

செய்திகளும் குறிப்புகளும் ருஅக

சித்தாந்த வகுப்பு ருஅசூ



சிலம்பு உசூ | வள்ளுவர் ஆண்டு ககூஅரு, ஆடி (Aug., 1952) | பரல் கஉ

## 'செந்தமிழ்ச் செல்வி'

### இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்


க. திரு. மகாமகோபாத்தியாய பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி.

உ. ,, 'சித்தாந்த கலாநிதி' வித்துவான், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், தலைமைத் தமிழ்விரிவுரையாளர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

ங. ,, துடிசைகிழார், அ. சிதம்பரனார் அவர்கள், கோயமுத்தூர்.

ச. ,, தி. சு. கந்தசாமி முதலியார் அவர்கள், எம். ஏ., வழக்குரைஞர், சாத்தூர்.

ரு. ,, வித்துவான், மு. இராசாக்கண்ணனார் அவர்கள், B.O.L. (Hons.) M.E.S., அரசினர் கல்லூரி, கோயமுத்தூர்.

சு. ,, வித்துவான், பண்டித, கா. பொ. இரத்தினம் அவர்கள், பி. ஏ. (ஆனர்ஸ்) பி. ஓ. எல். அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, கொழும்பு.

எ. ,, 'சித்தாந்த பண்டிதர்' ப. இராமநாத பிள்ளை அவர்கள், கழகப்புலமையாளர்.


---



## நற்றிணை நானூறு

இதன்கண் பண்டுள்ள தமிழக எல்லை, மொழிவளம், நாட்டு வளம், கொடைவளம், செங்கோன் முறைமை, போர்த்திறன், நாகரிக மாண்பு, நன்னெறி வாழ்க்கை, கடவுட் கொள்கை, மற மானம் முதலிய பலவும் அகச்சான்றுடனும், அமைந்த உவமை யுடனும் பொருள்நயம் செழுமக் காணலாம்.

இதற்கு, ஆசிரியர் பின்னத்தூர் திரு. அ. நாராயணசாமி ஐயரவர்கள் பல்லாற்றானும் செவ்விய நல்லுரையொன்று இயற்றி 1914 இறுதியில் வெளிப்படுத்தியுள்ளார்கள். உரை, உள்ளுறை இறைச்சி மேற்கோள் முதலிய விளக்கமும், ஆங்காங்கே இலக் கணக் குறிப்புக்களும், துறைச்சிறப்புக்களும் காட்டிஎளிய இனிய தூய நடையில் செல்கின்றது.

அவ்வுரையினைப் பின்னுங்கிடைத்த திருத்தப் பாடங் களுடன் செப்பம்செய்து, கடினமும் மயக்கமுமாகிய சந்திகளைப் பிரித்து, ஆயிரத்தைஞ்ஞூறுக்கு மேற்பட்ட அருஞ்சொற் பொருள் விளக்கத்துடன் நல்ல முறையில் நம் கழகப் பதிப்பாக வெளிவந்துளது.

அழகிய இருவண்ண மேலட்டையுடன் கூடிய
மலிக்காக்கட்டு விலை ரூ. 7 80



பேராசிரியர்:

கா. ர. கோவிந்தராச முதலியார் அவர்கள்

தோற்றம்:

**31—10—1874.**

மறைவு:

**12—7—1952.**

ஓம்

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௨௬ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௩, ஆடி. ஆகஸ்டு, 1952 | பரல் ௧

# பெரும்புலவர் கா. ர. கோவிந்தராச முதலியார்

*பிறப்பு*

"கல்வியைக் கரையி லாத காஞ்சிமா நகர்" என எல்லையில் அருளாளர்களாலும் போற்றப்படும் சிறப்பு வாய்ந்தது காஞ்சிபுரம். இது, திருநகர் அமைப்பாலும், திருக்கோவில் அமைப்பாலும், பண்டைப் பழந்தமிழ் ஆட்சிச்சிறப்பாலும், பல்வகைக்கொள்கை வல்லார் பிறப்பாலும் உயர்ந்தோங்கித் திகழ்ந்தது.

இவ்வூரின்கண் அரசியல் முதன்மையால் முதலியாரென வழங்கிவரும் உயர்குலத்துத் தோன்றலார் அருணசல முதலியாராவர். அவர்தம் அருந்தவப் பேற்றால் பிறந்த செல்வனார் அரங்கசாமி முதலியார். இவர் உரிய காலத்துப் பொற்புறு கமலாம்பாளை மணந்தனர். செவ்வனே இல்லறம் நிகழ்த்தினர். இவர் போர்ப்படைப் பள்ளர் மருத்துவராக (Military Apathecary) ஆர்வமுடன் தொண்டாற்றினர்.

இப்பெருந்தகையார்க்கு நற்றவப்பேற்றால் மக்கள் மூவர் தோன்றினர். அவர்கள் முறையே திருவேங்கட முதலியார், கா. ர. கோவிந்தராச முதலியார், நாகரத்தின அம்மையார் ஆவர். இவருள் நம்புலவர் பெருமான் நடுவுள்ளவர் என்பது மகிழ்தற்குரியது ஒன்றல்லவா! இவர், பவ ஆண்டு ஐப்பசித் திங்கள் ௧௬-ம் நாள் (31-10-1874) ௧௧-மணிக்குத் தோன்றினர்.

*படிப்பு*

புலவர் அவர்களின் கலைபயில் இளமைப்பருவத்தே தந்தையார் காலஞ்சென்றனர். இவர் இளமையில் 'செங்கல்வராய

இலவசப் பள்ளியில்' சேர்ந்து முறையாகக் கலைபயிலுங்கால் ஆர்வமும் சுறுசுறுப்பும் நேர்மையும் உள்ளவராய் நன்கு கற்றனர். கல்வியிலுள்ள ஆர்வத்தால் தாமாகவே காட்சிப்புலனும் நூற்களை மாட்சியோடும் பயின்றனர்.

## தமிழ் அன்பு

நம் புலவர் தாமாகவே பலசெந்தமிழ் நூல்களைக் கற்று வந்தமையால் அதன்கண் அன்பும் வன்மையும் முன்புறக் கொண்டனர். இவ்வியல்பு, மக்கள் ஒரு பிறப்பில் கற்ற திருவினும் மிக்க கல்வி வரும்பிறப்புத்தோறும் உயிரோடு தொடர்ந்துவருவதாலாம். இவ்வுண்மை,

> "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
> எழுமையும் ஏமாப் புடைத்து"
>
> —திருக்குறள், ௩௯௮.

என்னும் செந்தமிழ் பொதுமறையால் உணரலாம். சித்தாந்த சைவமெனும் செந்நெறிச் செல்வர்கள் முப்பொருள் உண்மை தேற்றும் திறலோர். அவர்கள்தம் சொற்பொழிவை ஆர்வமுடன் கேட்டு உளங்கொள் உவகையராய்த் திகழ்ந்தனர். இது 'யாப்பினுள் அட்டிய நீர்போல்' இவர்தம் தமிழ்ப் பயிரை வளர்த்துச் செழிக்கச் செய்வதாயிற்று. எங்கெல்லாம் சைவச் சொற்பொழிவுகள் நிகழ்கின்றனவோ அங்கெல்லாம் நம் புலவர் தளரா ஊக்கத்துடன் சென்று சென்று செவிமடுப்பாராயினர். கேட்டவற்றை எண்ணி இன்புறுவராயினர். இதன் பயனாகத் தமிழறிவு பெருகித் தமிழை முறையாகக் கற்க வேண்டுமென்னும் நிறை அவாக்கொண்டனர்.

## தமிழ்கற்றல்

இவர்தம் தமிழ்கற்க வேண்டுமென்னும உலையா முயற்சி தலை சிறப்பக்கண்ட அடிகள் இராமலிங்கத் தம்பிரான் அவர்கள் திருவாளர், சா. பசுபதி நாயகர் அவர்களிடம் சேர்ப்பித்தனர். இஃதன்றே முற்றத்துறந்த முனிவரர்கள் கற்பார்க்கும் கற்பிப்பார்க்கும் இடைநின்று கூட்டுவித்து அமிழ்தினும் இனிய தமிழ் மொழி வளர்க்கும் அறத்தொண்டும் உயிர்க்கொடையுமாகும். உன்னிப்பார்மின்! ஒல்லும்வகை ஓம்புமின்!!

புலவர் ஆசிரியர்பால் திருவேங்கடமாலை முதலிய சில இலக்கிய நூற்களை முறையாகப் பாடம் கேட்டனர். தெய்வ நாட்டமும் தீந்தமிழன்பும் ஒருங்கு கைவரப்பெற்று ஓவா முயற்சியுடன் உன்னிப்பாகக் கற்றனர். அதனால் மிகுவிரைவில் இலக்கிய அறிவு நிரம்பப் பெற்றனர்.

**இலக்கணம் பயிறல்**

இலக்கியம் கண்டதற்கிலக்கணம் இயம்பவேண்டுவது இன்றியமையாததொன்று. அஃது ஈன்றார் மகவினுக்கு இயைந்த எழிற்பெயரமைக்கும் ஏரையொக்கும். அதனால், இலக்கணம் வல்லாரையடுத்து இலக்கணம் பயிலப் பேரவாக்கொண்டனர். அஞ்ஞான்று இலக்கணம்வல்லுநராய் அந்தண்மையோடு போதிக்கும் ஆர்வத்தராய்ப் போதிப்பதையே பொருளாகப் போற்றி வந்த பெருந்தகையார் திருவாளர் அப்பன் செட்டியார் அவர்களாவர்.

அவர்கள்பால் நம்புலவர் சென்று பணிவும், இன்சொல்லும், நன்னயமும் பெருகத் தம் உள்ளக்கிடக்கையைத் தெள்ளிதிற் புலப்படுத்தினர். அவர்களும் பருகுவன் அன்ன ஆர்வத்தராய் விளங்கும் இவர்தம் வேணவாவைக்கண்டு, ஆணமிக்க வுள்ளத்துடன் போதித்தருள்வாராயினர். அந்நூல் நன்னூற் காண்டிகையுரையாகும். கற்பிக்குமாறு வேண்டிக்கொண்ட பொற்புடை நூலும் அதுவேயாம். இதன் வாயிலாக ஒருவாறு இலக்கண அறிவு நிரம்பப் பெற்றனர்.

**பெருநூல் கற்றல்**

காஞ்சிபுரம் மகாவித்துவான் இராமசாமி நாயுடு, அவர்கள் பால் தஞ்சைவாணன் கோவை, நாற்கவிராச நம்பி அகப்பொருள், திருக்குறள், கம்பராமாயணம் முதலிய பெருநூல்களை ஆராவேட்கைப் பெரும் பொருள் அவாவினன்போல் பயின்றனர். அக்காலத்து இவர்களுடன் ஒருங்குகற்ற ஒரு சாலை மாணவர் தமிழ்ப் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியாரவர்களாவர்.

**கற்கும் காதல்**

புலவர் இலக்கண இலக்கியப் பெருநூல்கள் பலவும் பல்லாசிரியர்பால் தக்கார் பலர் தோழமையோடு பலகாற்கற்றும் மேலும் மேலும் கற்கவேண்டுமென்னும் காதல் கைம்மிகக் கொண்டனர். இஃதன்றே கற்பார்க்குவேண்டும் கவின்பெருங் கடமை. அக்காலத்துத் தியாலாச்சிக்கல் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக உயர்திருவாளர். கோ. வடிவேலுச் செட்டியாரவர்கள் விளங்கினர். அவர்கள் இலக்கண இலக்கிய வல்லுநர், வேதாந்தமெய்ம்மைச் செல்வர். போதிக்கும் பேராற்றல் பொருந்தியவர்; கழகங்கள் பல தோன்றற்கும் செயற்படற்கும் உறுதுணையாய் நின்று ஓவாதுழைத்தவர். திருக்குறள் முதலிய சிறந்தநூல்கட்கு விரிவுரைகண்டவர் அவர்களை அண்மி கற்குங் காதலைக் கட்டுரைத்தனர். அவர்களும் அன்

புடன் ஏற்றுக் கற்பிப்பாராயினர். அவர்கள்பால் கற்ற பெருநூல்கள் நன்னூல், இராமானுசக் கவிராயர் விருத்தியுரை, தண்டியலங்காரம், புறப்பொருள் வெண்பாமாலை முதலியன.

### தொல்காப்பியம் கற்றல்

மேற்குறித்த நூல்களெல்லாம் மாசறக்கற்ற வன்மையால் ஒல்காப்பெரும்புகழ்த் தொல்காப்பியத்தைத்தாமே கற்கத் தலைப்பட்டனர். "உழப்பின் வாரா உறுதிகள் உளவோ" என்பதற்கிணங்க, ஒருவாறு கற்றுவருவாராயினர். கற்குங்கால் இடையிடையே தோன்றும் ஐயப்பாடுகளை அப்போது முதுபெரும் புலவராய்த் திகழ்ந்த திரு. த. கனகசுந்தரம் பிள்ளையவர்களை உசாவித் தீர்த்துக்கொண்டதுடன் தெளிவும் எய்தினர். இஃதன்றே கல்வி கற்பார்க்கு இருக்கவேண்டிய இன்றியமையாக் கடப்பாடு! இம்முறையில் அல்லவா நம் புலவர் பேராசிரியராய்ப் பெருநூல் வல்லாராய்த் திகழ்ந்து பேரும் நிலையும் பெருந்திருவும் எய்தித்திகழ இடனாயிற்றென்க.

### தாளாண்மை

புலவர் அவர்களின் இருபத்தோராம் ஆண்டில் (1895) அரசியலார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து பயின்று தொடக்கத் தகுதி (பிரைமரி கிரேட்)த் தேர்வில் மிகவெளிதாக வெற்றியுற்றனர். சிறுவள்ளூர் துணை உயர்வு (லோயர் செகண்டரி)ப் பள்ளியில் ஆசிரியராய் அமர்ந்தனர். அத்தொழிலைச் செம்மையுற நடத்திவருங்கால் 'தன்னை மேனிலைக்கண் நிறுத்துவானும் தான்' என்பதற்கிணங்க இவர்தம் நல்லொழுக்கம் கண்ட முதல்வர்கள் வேண்டச் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தமிழ்ப்பண்டிதராக விளங்கினர்.

### துணைத்தமிழ் ஆசிரியர்

1910-ஆம் ஆண்டில் சென்னைப் பச்சையப்பன் பள்ளியில் துணைத்தமிழாசிரியராகப் பணி புரிந்தனர். இப்பணியில் 1922-ஆண்டுவரை துணைத்தமிழாசிரியராகவே தொண்டு புரிந்தனர். அவ்வாண்டிலிருந்து 1936-ஆம் ஆண்டுவரை தலைமைத் தமிழாசிரியராய்ப் பணி புரிந்தனர். மாணுக்கர்கள் அனைவர்களும் இவர்பால் பேர் ஈடுபாடு கொண்டனர். என்னை? இவர் 'காட்சிக்கெளியராய்க் கடுஞ்சொல் அல்லராய்', உளங்கொள்ளக் கற்பிக்கும் வன்மையாலும், செய்யுள்களைப் பண்ணொடு பாடி இன்புறுத்தல் முதலியன மேற்கொண்டமையாலும் என்க.

### திருமணம்

புலவர் அவர்களின் இருபத்தேழாம் ஆண்டில் நாற்குணமும் நாற்படையாய் நல்லெழிலே பேரணியாய், கற்பே காவலாய் விளங்கிய பொற்புறுதிருவினரான சிவரத்தன அம்மையாரை நன்னுளால் நன்மணம் புரிந்து "இல்லறத்தை நல்லறமாக" ஆற்றினர். இல்லறத்தார்க்கின்றியமையாக்கடன்: வருவிருந்து பேணல், வாய்மைநாடல், வண்டமிழ் வளர்த்தல், தெய்வவழிபாடு, ஒப்புரவு, ஈகை, உறவு, உறுதி முதலியன ஓம்பல் என்க. இவையனைத்தும் புலவரால் ஒல்லும் வகை ஓவாது பேணப்பட்டன. இப்பேரறங்கட்கு, இம்மை, உம்மை, அம்மை என வகுக்கப் பெற்றுள்ள முத்திற இன்ப வாழ்வுக்குத் துணையாயுள்ள வாழ்க்கைத்துணையாம் அம்மையார் உற்றதுணையாயிருந்து கருத்தொத்துக் கடனாற்றினர்.

### மக்கட்பேறு

எக்குறையும் இல்லாது வாழ்ந்துவரும் இவர்கட்கு மக்கட் குறையே குறையாகப் பல்லாண்டுகள் கழிந்தன. இருவரும் இயற்றிய பெறலரும் தவத்தால் ஒரு பெண் மகவு பிறந்தது. அம்மகவுக்குக் கிருட்டிணவேணி எனப் பெயர் சூட்டினர். செம்மையுற வளர்த்தனர். தீந்தமிழ் பயிற்றினர். ஆந்துணையும் பேணினர். மைக்கருங்குழலாரும் தக்கபருவம் எய்தினர்.

### மர்மன் நிலை எய்தல்

கிருட்டிணவேணி அம்மையாரை முறை மாப்பிள்ளை என்று சொல்லப்பெறும் தம் தங்கை நாகரத்தின அம்மையாரின் மகனார்க்கு மணம் புரிவித்தனர். இவ்விரு காதலரும் இல்லறத்தைச் செவ்வையுற நடத்தினர்.

### பெயரர்க்கண்டு பெரு மகிழ்வெய்தல்

புலவரின் அருமை மகள்வயிற்றுப் பேரர்கள் நால்வராவர். இவருள் ஆண்பாலார் ஒருவர்; பெண்பாலார் மூவர். இவருள் ஆண் பெயரன் போர்முனை புக்குப் புகழ்கொண்டு உயிர்நீத்தனன். பெயர்த்திமார் மூவருள் ஒருவர் உயர்நிலைப்பள்ளியில் மேல் வகுப்பில் கற்று வருகின்றனர்.

### பணியாற்றும் பண்பு

புலவர் எஞ்ஞான்றும் குறித்த காலத்துப் பள்ளிக்குச் செல்லுவதில் தவறியதே கிடையாது. ஒருநாளேனும் வீணுக விடுமுறை எடுத்ததே இல்லை. இணையில் துணையாசிரியர், அணைதரும்மாணவர், தலையாய நண்பர் முதலிய பலரும் இவர்களுடன்

ஒற்றித்து ஒண்மையுறுவர். என்னை? புன்னகை பூத்த முகமும், நன்னய மொழியும், வழுவில் ஒழுக்கமும், அரிய பொருள்களை 'எண்பொருளவாகச் செலச்சொல்லும்' ஏற்றமும்; மறந்தும் புறந்தொழா மாண்பும், எளிய வாழ்க்கையும், விளக்குவதில் வேட்கையும், பலநூல் பலவுரை பலகால் பயின்ற பாங்கரும் சிறப்பும், பிறவும் யாவரையும் இவர்கள்பால் ஈர்த்தன என்க. மாணவர்கள் இவர்கள்பால் என்றும் சிறப்பான நன்மதிப்புக் கொண்டுள்ளனர். இவர்களும் அம் மாணவர்பால் பேரன்பும் பெருமதிப்பும் உடையராய் விளங்கினர். பாடங் கற்பிக்குங்கால் விரையார், வெகுளார், விரும்பி முகமலர்ந்து நல்லுரையால் நவில்வர். 1936-ஆம் ஆண்டு, சூலைத் திங்களில் பச்சையப்பன் கல்லூரியிலிருந்து விடுதி பெற்றனர்.

### செய்யுள் யாத்தல்

புலவர்க்குக் கவிபாடும் திறம் இயற்கையிலேயே அமையப் பெற்றுள்ளது. இவர்கள் அவ்வப்போது ஆக்கிய அருஞ் செய்யுட்கள் அளப்பில. அவையனைத்தும் சொற்சுவையும், பொருட் சுவையும், திட்ப நுட்பச்செறிவும், இருவகையணியும் மருவியவாய்த் திகழ்வன. ஆயின், அந்தோ! இவர் அவைகளைப் படி எழுதித் தொகுத்து வையாதுவிட்டமை பெரிதும் வருந்தத்தக்க தொன்று. சிலவற்றைப் பலர் கட்டாயத்தின்மேல் தொகுத்து வைத்துள்ளனர். அவையாவும் இனித்த நறும் தனிப்பாடல் களாக விளங்குகின்றன. அவற்றின் தொகை கிட்டத்தட்ட நூற்றுக்கு மேலாம்.

### நூல் யாத்தலும் போதித்தலும்

புலவரவர்கள் பள்ளியினின்றும் ஓய்வுபெற்ற பின்னரும் பாடஞ் சொல்லுதல், அரும்பெரும் நூற்கள் பல வியற்றுதலாகிய தமிழ்த் திருத்தொண்டினைக் கைவிட்டிலர். இவர்கள்பால் அருந்தமிழ் பயின்ற மாணவர் பலர் இன்று பெரும் புலவராய்த் திகழ்கின்றனர். இவர்கள் அனைவரும் ஆசிரியர்பால் பேரன்பும், பெரு நன்றியும், பெருமதிப்பும் கொண்டுள்ளனர்.

மையறு நூலே கையினுக்கு அணிகலம் என்பதற்கிணங்க நம் புலவர் திருக்கையில் எப்போதும் நன்னூல் விருத்தியுரை காணப்பெறும். மேலும், அக்காட்சி ஏனையாரும் நூல் கைக்கொண்டு ஒழுகுவதே மேல் என்னும் உண்மையை நுண்மையாக எடுத்து நுவலும். அம்மட்டோ, ஆசிரியர்க்கு நன்னூல் விருத்தியின்பால் உள்ள ஆரா வேட்கைப் பெருக்கத்தையும் அறிவுறுக்கும்.

இவர் நன்னூலை ஆறுமுறை படித்ததாகவும், பன்னிரு முறை பாடஞ் சொன்னதாகவும் அடுத்தடுத்துக் கூறுவர். அதனால், இவர் தமக்கு இலக்கணத்தில் ஒரு தனிப்பட்ட வன்மையிருந்ததென்பது தேற்றம். இவ்வுண்மை இற்றை நாட் புலவர் எல்லாரும் மறுப்பின்றி ஏற்றுப்போற்றுவதொன்றாம்.

### அழகுறப் பதிப்பித்த பழம் பெரு நூற்கள்

இவர்தம் இலக்கணப் புலமையின் ஏற்றத்தினால் க. யாப்பருங்கலக்காரிகை, உ. நன்னூல் இராமானுசக் கவிராயர் விருத்தியுரை, ௩. இறையனார் அகப்பொருள் உரை, ௪. வீரசோழியம் பழைய வுரை, ரு. நாற்கவிராச நம்பி அகப்பொருள் பழைய வுரை, சு. நேமிநாதம், எ. தொல்காப்பியம் முதற் சூத்திர விருத்தி, அ. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம் பூரணர் உரை முதலிய அரும் பெரும் நூல்கள் பலவற்றையும் தெளிந்த குறிப்புரைகளுடன் சிறந்தமுறையில் பதிப்பிக்கத் துணை புரிந்தனர்.

### உரைசெய் உயர் நூல்கள்

க. சரசுவதி அந்தாதி, உ. இனிது நாற்பது, ௩. இன்னா நாற்பது, ௪. கார்நாற்பது, ரு. பன்னிருபாட்டியல், சு. அரங்கசாமிப் பாட்டியல்* எ. அரிசமயதீபம் முதலியவற்றிற்குச் செவ்விய உரையியற்றி வெளிப்படுத்தியுள்ளார்கள். இவ்வுரையை நடுநின்று நோக்குவார்க்கு இவர்தம் இலக்கண இலக்கியப் பெரும்புலமை தெள்ளிதிற் புலனாம்.

க. களவழி நாற்பது, உ. திரிகடுகம், ௩. நான்மணிக் கடிகை, ௪. ஏலாதி, ரு. நள வெண்பா முதலிய நூல்களில் நடுநின்றாய்ந்து குறித்துள்ள உண்மைகளால் விரிவும் நேர்மையும் விரவப்பெற்ற தனிப்பெரும் பண்பு நன்கு புலனாம்.

### செய்யுள் நூல்கள்

க. ஆழ்வார் உயிர்வருக்க மாலை, உ. மாறன் பஞ்சரத்தினம், ௩. திருவேங்கடப் பதிற்றுப் பத்தந்தாதி, ௪. திருமகள் வெண்பாப் பத்து, ரு. திருமகள் கலித்துறைப் பத்து, சு. சரசுவதி ஒருபா ஒருபஃது, எ. சரசுவதி வெண்பாப்பத்து, அ. சரசுவதி கலிவிருத்தப் பத்து, கூ. சரசுவதி வஞ்சி விருத்தப் பத்து,

* இவர்தம் குடும்பம் வழிவழித் தமிழ்ப்பெரும் புலமை வாய்ந்தது என்பதன் அறிகுறியே இந்நூலாகும். இந் நூலாசிரியர் நம் புலவர்தம் தந்தையாரின் தந்தையாராவர். இவர் பெயர் அருணாசல முதலியார் என்ப. இவர் இதனைத் தன் மகன் பெயரால் யாத்தனர்.

௧௦. சரசுவதி சந்திரகலாமாலை, ௧௧. நம்பாடுவார் சரிதம் முதலிய செய்யுள் நூல்கள் இவர்களால் எளிமையும் இனிமையும் பொதுளப் பாடப் பெற்றன.

உரை நடை நூல்கள்

௧. கோவலன் சரிதை, ௨. சங்கநூல், ௩. இந்திய வீரர், ௪. ஆழ்வார் வரலாறு, ௫. ஆழ்வார் வழிக்குரவர் வரலாறு முதலியன உரைநடை நூல்களாகும். அச்சாகவேண்டிய கைப்படிகள் ௧. ஆழ்வார் வழிக்குரவர் வரலாறு இரண்டாம் பாகம், ௨. கண்ணன் வரலாறு, ௩. திருப்பாவை ஆராய்ச்சி முதலியன.

நாடக நூல்

புலவர்தம் இளமைப்பருவத்தே "அம்பிகாபதியும் அரசிளங்குமரியும்" என்னும் அரிய நாடகநூல் ஒன்றியற்றிப் பெரும் புகழ் பெற்றனர்.

ஆராய்ச்சி நூல்

ஆய்ந்தமைந்து நன்கு புரிந்தபின்னரே எவ்வகை ஆய்வினையும் வெளிப்படுத்துவர். அவ்வாய்வின்கண் எவரும் எவ்வகைக் குறையும்கூற இடனிராதென்பது துணிபு. அம்முறையில் ஆராய்ந்து அமைத்தது 'திருப்பாவை ஆராய்ச்சி' தம் வாழ்க்கை இறுதியில் 'முல்லைப் பாட்டினை'ச் செவ்விதினுய்ந்து நுண்மாண் நுழைபுலக்கருத்தில் தேக்கிய நுண்பொருள்கள் அனைத்தினையும் அமைத்து ஓர்புத்துரை அதற்கு வரைந்தனர். இந் நூலொன்றே அவர்தம் ஆராய்ச்சித் திறனை விளக்கும் அரும் பெரும் கருவூலமாகும்.

இந்நூல் வெளிவருதலைத் தம் இறுதிக் காலத்துப் பேராவலோடெதிர்பார்த்திருந்தனர். என்னே வினைப்பயன்! அவ்வரிய நூல் இவர்பேரா இயற்கை எய்திய ஐந்தாம் நாள் வெளிவரலாயிற்று.

பாராட்டு

புலவர் அவர்கள் பல்வேறு துறைகளில் சிறந்தோங்கிச் செய்யுளாலும், உரைநடையாலும், உரையினுலும், ஆராய்ச்சியினுலும் செந்தமிழ் அன்னைக்கு ஆக்கப்பணிவழி அமைத்த அணிநலங்கண்டு செல்வரும் புலவரும் சேர்ந்தொருக்கியைந்து 22-5-1949-ல் பொற்கிழி அளித்துப் பாராட்டிப் போற்றினர்.

அப்பேரவைக்குச் சென்னைக் கோநகராண்மைத் தலைவர் (மேயர்) திரு. S. இராமசாமிநாயுடு அவர்கள் தலைமை தாங்கினர்.

இப்பாராட்டினைக் கண்ணுற்ற பச்சையப்பன் கல்லூரிச் செயற் குழுவினர் நம் முதுபெரும் புலவரின் நிழலோவியத்தைத் தமிழாசிரியர் கழகத் தலைவர் திரு. புலவர் மயிலை - சிவ முத்து அவர்கள் வாயிலாகப் பெற்று அண்மையில் திறந்து வைத்துள் ளார்கள்.

பேரா இயற்கை

நோய்வாய்ப்பட்டு இறக்கும் வரையும் நூலும் கையு மாகவே காட்சியளித்தனர். இஃதன்றோ தமிழ்த்தொண்டு! தமிழன்பு!! மூப்பினால் யாப்புறும் யாக்கை தளர்ந்துளதேனும் உள்ளத்துரமும், ஊக்கமும், உழைப்பும் குன்றில. கையும் ஆடும் நிலையவாயினும் எழுதும் அப்பணியை மறந்தில. சின்னாள் நோய்வாய்ப்பட்டு 1952-ஆம் ஆண்டு, சூலை 12-ஆம் நாள் சனிக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்குக் குடும்பமும், புலவரும், குறை வில் அன்பரும் பிறரும் ஆற்றொணு வருத்தமெய்தக் கண்ணன் கழலிணை நண்ணினர்.

மறுநாள் ஞாயிறு காலை பத்து மணிக்குப் பெருங் கூட்டம் தொடர்ந்துவரத் திருவுடல் நன்காடு சேர்ந்தது. அக் கூட்டத் தில் கலந்துகொண்ட தமிழ் அன்பர்களும், புலவர் பெருமக்க ளும், பாராட்டுரை பல நிகழ்த்தினர்.

உடலம் எரியுண்டது. உயிர் இறையடி சேர்ந்து இன்புற எல்லாரும் ஏத்தினர். நாமும் அவ்வண்ணமே ஏத்துகின்றாம்.

நம் ஆழ்ந்த கையறுநிலைப் பரிவினை புலவர்தம் குடும்பத் தார்க்கு அறிவிக்கின்றாம். ஆறுதலெய்துவாராக. ஆவி இன்புற ஆண்டவனை வேண்டுவாராக.

சீரார்கோ விந்தரா சச்செம்மல் கண்ணனடி
சேராநின் ஞூரானி நாலேமொழான்—றேரார்
சனிக்கிழமை சால்புலவர் மக்கள்மனை பேரர்
துனிகூரக் காண்பதெந்நாள் சொல்.

—இதழாசிரியர்

# கழற்சிங்கன் யார்?

[புலவர், திரு. நல்லொளியன்]

(சிலம்பு-உசு, இதழ் கூ, பக்கம் சஉசு தொடர்ச்சி)

மூன்றும் நந்திவர்மன்மேல் பாடப்பெற்ற நூல் நந்திக் கலம்பகமாகும். "கழல்நந்தி" என நந்திக்கலம்பகம் 13, 28-ம் பாடல்களிலும் "பல்லவர் கோளரி" என 59-ம் பாடலிலும் கூறப் பெற்றுள்ளது. ஆதலால் இவ்விரண்டினையும் சேர்த்துப் பார்க்கின் கழல்+அரி=கழற்சிங்கன் என்று பொருள்படுதலைக் காண்க என மீனாட்சியம்மையாரும் இராசமாணிக்கனாரும் கூறியுள்ளனர். இவற்றையும் சிறிது ஆராய்வாம். கழல் என ஒரு பாட்டிலும் அரி யென மற்றொரு பாட்டிலுமுள்ள தனித்தனியான இரு சொற்களை ஒன்று சேர்த்து ஒரு பெயராக்கிக் கழற்சிங்கன் என்று கூறியுள்ளனர். ஒரு பாடலிலேயே பலவிடங்களில் சொல்லப்பட்டவற்றை ஒன்று சேர்த்துப் பெயராக்கிக் கொள்ளுதலே தமிழிலக்கிய மரபாகும்* ஆனால், பல பாடல்களில் பல தொடர்களிலுள்ளவற்றைப் பிரித்துக் கூட்டிப் பெயரிடுமுறை இதுவரை தமிழிலக்கியத்திலில்லாத புதுமுறையாகத் தோன்றுகின்றது. சொற்பொருளை உணரின் இதன் உண்மை நன்கு புலனாகும்.

கோளரி என்னும் சொல்லைக் சேக்கிழார் கையாளும்போது திருஞானசம்பந்தரைப் "பரசமய கோளரி" சைவமல்லாத பிற சமயத்தவர்க்கெல்லாம் சிங்கம் போன்றவன் என்பதே பொருளாகும். கோளரி—சிங்கம் என்றும் (பிங்கலம்) சிங்கம் என்னும் பொருள் தரும் என Lexicon அகராதி Vol. II-ல் பக்கம் 1202 வரி 24 ல் உள்ளதைக் காண்க. அதனை இரண்டாகப் பகுப்பின் "அரி" என்பது பலபொருளொரு சொல்லாகும். திருமால், கள், கதிர், பிடிக்கதிர்; (ஏவல்) சிங்கம் முதலிய பலபொருளுணர்த்தும். ஆதலால், பல்லவர் கோளரி என்பது பல்லவரது பகைத்தீமையை அரிந்தவன் என்றும் பல்லவப் பகைஞருக்கு சிங்கம்போன்று அச்சத்தைத் தருபவன் என்றும் பொருள் தருவதாகும். ஆகவே இம் மொழியைப் பிரித்து வேறொன்றுடன் கூட்டுதல் பிழையாகும் ஆதலாலும் "கழல் நந்தி" என்பதில் கழல் என்பது அரசர்க்குரிய பெருமையையும் வீரத்தை

---

* ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றாகிய சூளாமணியில் "சுவலனசடி" என்னும் விஞ்சையர் மன்னர் பெயர் கூறப்பட்டமையைக் காண்க.

யும் புலப்படுத்தும் ஓர் அடைமொழியாகும். நந்தி என்பது இயற்பெயராகும்* எனவே "பல்லவர் கோளரி" "கழல் நந்தி" என்னும் சொற்றொடர்கள் அவர்கள் கூற்றுப்படி கழற்சிங்கன் என்னும் பொருள்படாமை நன்கு அறியலாம். அஃதன்றியும் இவனை (நந்திவர்மனை)க் கூறும் பட்டயங்கள் செப்பேடுகள் ஒன்றில்கூட இவனது இயற்பெயர் சிங்கன் என்று கூறப்படவில்லை. இவனுக்குச் சிங்கன் என்னும் பெயரிருப்பின் கூறிக்கொள்ளாதிருப்பனோ? இரான். இவற்றால் நந்திவர்மனுக்குச் சிங்கன் என்னும் பெயர் இல்லை என்பதும் இவன் காலத்தில் திருவாரூர் நிகழ்ச்சி நடைபெறவில்லை என்பதும் இவனைக் கழற்சிங்கன் என்பது பொருந்தாக் கூற்றென்பதையும் கண்டாம்.

**இராசசிம்மன் கழற்சிங்கனு ?** ஆம். அவனே கழற்சிங்கனுவன். பல்லவர்களுள் பெயரிறுதியில் சிங்கன் என்னும் பெயருடையவர்கள் இருவராவர். முதலாமவன் நரசிம்மவர்மன் I என்பவனுவன். அவன் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு நாயனுர் காலத்தவன். அதாவது ஏழாம் நூற்றுண்டின் முற்பகுதியாகும். மற்றவன் இராசசிம்மன் I அல்லது நரசிம்மன் II என்பவனுவன். சைவப் பெரியார் சுந்தரமூர்த்திநாயனுர் காலத்தில் வாழ்ந்தவன். இந்நரசிம்மனே என்பது சுந்தரரது வளர்ப்புத் தந்தையின் பெயராலும் திருமுறைகண்ட புராணத்தில், திருநாவுக்கரசு நாயனுர் திருப்புகலூரில் அடைந்தார் என்று கூறி, மறு பாட்டில்,

> "பின்புசில நாளின்கண் ஆரூர்நம்பி பிறங்குதிரு வெண்ணெய்
> நல்லூர்ப்பித்தா என்னும்,
> இன்பமுதல் திருப்பதிகம் ஊழிதோறும் ஈறுய் முப்பத் தெண்
> ணுயிரம்தாக......அருளிச் செய்தார்" (16)

என்று திருமுறை கண்ட புராணமுடையார் கூறியுள்ளதால் சம்பந்தர் திருநாவுக்கரசு நாயனுர் காலத்திற்கு அண்மையிலேயே சில ஆண்டுகளின் பிறகே சுந்தரர் வாழ்ந்தார் என்பதும் பெறப்படும். அதற்கேற்ப இரண்டாம் நரசிம்மனே பல்லவராட்சியில் இருந்திருத்தல் வேண்டும் என்பதும் பெறப்படுதல் காண்க.

முற்காலத்தில் பேரரசர்கள் தமக்குத் திறை செலுத்தும் சிற்றரசர்க்கும் படைத்தலைவர்கட்கும் பட்டங்கள் வழங்குங்கால், தம் பெயர்களோடு இணைக்கப்பெற்ற பட்டயங்களையே கொடுப்பது, பெருவழக்காயுள்ளது. இவ்வுண்மையினை கல்வெட்டுகளும் செப்பேடுகளும் வரலாறுகளும் நமக்குத் தெளியக் காட்டுகின்

---

* தமிழ்ப்பொழில் துணர் 3. பக். 208.

றன. இவைகள் இராசராசப் பல்லவரையன்[1] மதுராந்தகன் கண்டராதித்தன்[2] இராசேந்திர சோழ சமயசேனாபதி[3] கங்கை கொண்ட சோழ மிலாடுடையான்[4] கண்டராதித்தராசன்[5] இராசேந்திர சோழ மாவலிவாணராயன்[6] கங்கைகொண்ட சோழ தன்மபாலன்[7] சேனாபதி வீரராசேந்திரதன்மபாலன்[8] ஆதித்த தேவனான இராசேந்திர மூவேந்த வேளான்[9] என்னும் பட்டங்கள் நெடுமுடிவேந்தர் பெயர்களோடு இணைக்கப்பட்டிருத்தலைக் காண்க. இதுபோலவே நரசிம்ம பல்லவனும் தன் கீழ்க் குறுநில மன்னவனாய் திருக்கோவிலூரை யாண்டுவந்த முனையரையர்க்கு "நரசிங்கமுனையரையர்" என்னும் சிறப்புப் பெயரளித்தான்.* இந் நரசிங்கமுனையரையரே சுநதரருடைய வளர்ப்புத் தந்தை என முன்னரே விளக்கப்பட்டது. இதனை முதன்முதல் ஆராய்ந்து கூறிய பெருமை திரு. வை. சதாசிவ பண்டாரத்தார் அவர்கட்கே உரியது. ஆதலால் சுந்தரர் காலத்தில் வாழ்ந்த பல்லவன் நரசிம்மவர்மன் II என்பவனே என்பது உறுதி. இவனை வரலாற்று ஆசிரியர் யாவரும் இராசசிம்மன் என்றே வழங்குவர்.

சமயநெறியில் இராசசிம்மன் சைவனா? என்பதையும் ஆராய்வாம். இவன் காஞ்சியிலுள்ள கைலாய நாதர் கோயிலை எடுப்பித்தான். இஃது அக்காலத்தில் இராசசிம்ம பல்லவேச்சுரம் என்னும் பெயருடையதாயிருந்தது. இக்கோயிலில் இவனது கல்வெட்டொன்று வடமொழியில் வரையப் பெற்றுள்ளது. அஃதிவ்வேந்தனைச் "சிவசூடாமணி" என்று புகழ்கின்றது.[10] இங்ஙனமே மகாபலிபுரம் என வழங்கும் இராசசிம்ம பல்லவேச்சுரம் என்ற கோயிலிலுள்ள கல்வெட்டும் பனமலைக்கோயிற் கல்வெட்டும் இவனைச் 'சிவசூடாமணி' என்றே கூறுகின்றன.[11] காசாக்குடிச் செப்பேடுகள் "பரமேச்சுரனே இராசசிம்ம பல்லவனாக அவதரித்துள்ளான்" என்று சிறப்பித்துரைக்கின்றன.[12] உதயேந்திரஞ் செப்பேடுகள் 'பரமமகேச்சுவரன்' என்று பகர்கின்றன.[13] வேலூர்ப்பாளையஞ் செப்பேடுகள் "இவன் சிவபெருமானுக்குக் காஞ்சியில் கைலாயத்தை யொத்த திருக்கோயிலொன்றை எடுப்பித்த பெருமையுடையவன்" என்று உணர்த்துகின்றன.[14]

---

1 முதல் 9 வரை. பிற்காலச்சோழர் சரித்திரம். முதற்பாகம் முறையே பக்கங்கள், 87, 134, 170, 183, 194, 204, 239, 25?.

* தமிழ்ப் பொழில் துணர். 3. பக். 208, 209.

10. S. I. I. Vol I No. 24.
11. தமிழ்ப் பொழில் துணர். 3. பக். 206.
12. S. I. I. Vol II No. 73.
13. " " No. 74.
14. " " No. 98.

மேலும் "சிவபெருமானுக்குக் குகன் பிறந்தாற்போலப் பல்லவப் பேரரசனான உக்கிரதண்ட (பரமேசுவர)னுக்குச் சுப்பிரமணியன் போன்ற அத்தியந்தகாமன் (இராசசிம்மன்) என்னும் பல்லவ அரசன் பிறந்தான்"[1] என்றும் கைலாயநாதர் கோயிலில் நரசிம்மனுக்கு வழங்கிய இருநூற்றைம்பது பட்டங்கள் பொறிக்கப்பட்டிருத்தலை இன்றும் காணலாம். ரிஷபலாஞ்சனன், ஸ்ரீ சங்கரபத்தன், ஈசுரபத்தன், ஆகமப்பிரியன் ஆகிய பட்டங்கள் இவனைச் சிவபக்தன் என விளக்குகின்றன.[2] "நெடுங்காலம் குடிகளை எவ்வகை இன்னல்களுமின்றிக் காத்து வந்த பல்லவ அரசன் இவன் ஒருவனே யாவன். காஞ்சியிலும் மாமல்லபுரத்திலும், பனைமலையிலும் சிவன் கோயில்களமைத்து சிவனடியார்களைப் போற்றி அன்னோர்க்குப் பல நலங்கள் புரிந்தனனே யன்றி வேறு ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை.[3] என்று "அறிஞர் துப்ரே" அவர்கள் கூற்றாலும் இவன் சிவபக்தன் என்பதோடு நாட்டில் அமைதி நிலவ அறஞ் செய்து வாழ்ந்துவந்தான் என்பதும் பெறப்படுதல் காண்க.

இவன் காஞ்சியில் கைலாயநாதர் கற்றளி எடுப்பித்து கடவுண் மங்கலஞ்செய்யக் குறிப்பிட்ட நாளிலேயே திருநின்றவூர்பூசலார் என்னும் அடியார் தன் மனத்தால் கட்டிய மனக் கோவிலுக்குக் கடவுண் மங்கலஞ் செய்ய நாள் குறிப்பிட்டார். இறைவன் அரசன் கனவிற்றோன்றி கற்கோயிற் கடவுண் மங்கல நாளை மாற்றி யமைக்கக் கட்டளையிட்டார் என்று பெரிய புராணம் கூறுகிறது. இதனையே "இவன் சைவ நெறியில் நடந்து மலத்தை எல்லாம் ஒழித்தவன்; இந்தக் காலத்தில் தேவரைக் கண்டவன்; துஷ்யந்தன் முதலனோர் வான் ஒலிகேட்டதில் வியப்பில்லை. நற்குணம் பறந்தோடிப்போன இக்காலத்தில் அவ்வான் ஒலியை ஸ்ரீபரன் (இராசசிம்மன்) கேட்டது வியப்பே. இவன் 'கலி' என்னும் மகரம் குடிகளை விழுங்கியபோது அவர்களைக் காத்தவன். இவன் பரந்து கிடக்கும் இச் சிவன் மந்திரத்தை (கோயிலை)க் கட்டினன். இஃதிவன் புகழைப்போலவும் அணியைப் போலவும் இருக்கின்றது. பாம்பரசனை அணியாகக் கொண்டவனும் தேவ அசுர கணங்கள் போற்றுபவனுமாகிய சங்கரன் இந்த இராசசிம்ம பல்லவேச்சுரத்தில் நெடுங்காலம் குடிகொண்டிருக்கட்டும்........சிவ சூடாமணியாகிய இவன் சைவ சித்தாந்தப்படி நடப்பவன். மகாதேவனுக்கு அடியவன்"[4] என்று

1. ,, Vol I P. 12.
2. S. I. I. Vol I No. 25 Varees 55.
3. தமிழ்ப் பொழில் துணர். 3. பக். 207.
4. S. I. I. Vol I P. 20

கூறுவதால் இவனே பெரும் சிவபக்தன் என்பதும் இவன் காலத்தில்தான் திருநின்றவூர் நிகழ்ச்சி நடைபெற்றது என்பதும் பெரும்போரேதும் இவன் காலத்தில் நடைபெறவில்லை என்பதும், இவன் பேரரசனாகவே தன் முன்னோர் வைத்துச் சென்ற இராச்சியபரப்புக் குறையாமல் ஆண்டு வந்தான் என்பதும் பெறப்படும். அதனாற்றான் சுந்தரன் இவனை "கடல் சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன்" என்று சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளான் என்பதும் உறுதியெய்துகின்றது. எனவே திரு. வை. சதாசிவபண்டாரத்தார் அவர்கள் செய்துள்ள முடிவே சரியானதாகத் தெரிகின்றது.

இவன்தான் திருவாரூர் முதலிய தலங்களுக்கு யாத்திரை செய்யும் வாய்ப்புள்ளவனாக இருந்தான். இவன் ஆரூர் சென்றமையை

"...கங்கைவார் சடையார் செய்ய
அடிமல ரன்றி வேறொன் றறிவினிற் குறியா நீர்மைக்
கொடிநெடுந் தானை மன்னர் **கோக்கழற் சிங்கர்** என்பார்"

"காடவர் குரிசி லாராங் **கழற்பெருஞ் சிங்கனார்**தாம்"

என்று கழற்சிங்க புராணத்திலும்,

"உலகு நிகழ்ந்த பல்லவர் **கோச்சிங்கர்**"

என்று செருத்துணை நாயனார் புராணத்திலும் சேக்கிழாரால் கூறப்பெற்றுள்ளவற்றால் வலியுறுதல் காண்க. செருத்துணையார் புராணத்தின் பாடலை நோக்கின் கழல் என்னும் அடையின்றிக் கோ என்னும் பேரரசர்க்குரிய அடைமொழியோடு சிங்கன் என்னும் இயற்பெயர் மட்டும் கூறப்பட்டிருத்தலின் இராசசிங்கன் என்னும் பல்லவமன்னனை என்பது உறுதியாதல் காண்க.

இவ்வாறு ஊர் சுற்றும் வாய்ப்புக்கு நாட்டில் போரில்லாமல் இருந்திருக்கவேண்டும். இதற்கு முன்னர் நடந்த போரினால் நாட்டில் பெரும் வற்கடம் தலைகாட்டலாயிற்று. அதனைத் தீர்க்கும் வழிகளை மக்கட்கு நேரில் உணர்த்தவும், பல்வேறு பகுதிகளிலுமுள்ள தன்மைகளை யாராயவும் அரசன் ஊர்சுற்ற எழுந்திருந்தனன்போலும். அதனாற்றான் நின்றவூர்ப் பூசலார் வெளியிலிருந்து நிதிதிரட்டமுடியாத நிலைமையை யடைந்தார் என்று காரணம் கூறும் சேக்கிழார்,

"காடவர் குரிசி லாராங் கழற்பெருஞ் சிங்க னார்தாம்
ஆடக மேரு வில்லார் அருளினால் அமரிற் சென்று
கூடலர் முனைகள் சாய வடபுலங் கவர்ந்து கொண்டு
நாடற நிலையில் வைக நன்னெறி வளர்க்கு நாளில்"

என்று கழற்சிங்கர் புராணத்திலும்,

"…………………………………கோயில்
"எடுப்பது மனத்துக் கொண்டார் இருநிதி யின்மை எண்ணார்"[1]

'மனத்தினாற்கருதி எங்கும் மாநிதி வருந்தித்தேடி
எனைத்துமோர் பொருட் பேறின்றி என்செய்கே னென்று நைவார்
நினைப்பினா லெடுக்க நேர்ந்து நிகழ்வுறு நிதிய மெல்லாம்
தினைத்துணை முதலாத் தேடி சிந்தையால் திரட்டிக் கொண்டார்"[2]

"காடவர் கோமான் கற்றளி எடுத்து"[3]

என்று கூறி விளங்க வைத்துள்ளார். கழங்சிங்கன் மூன்றாம் நந்திவர்மனே என்று சொற்பொருள் உணராது தவறாக உணர்ந்துகொண்ட இராசமாணிக்கனார் குருக்கோட்டை என்னுமிடத்தில் இராட்டிரகூட மன்னன் அமோகவர்ஷ நிருபதுங்கன் I (கி. பி. 814 முதல் 880) என்பவனுக்கும் நந்திவர்மனுக்கும் போர் நிகழ்ந்தது. அப்போரையே சேக்கிழார் "கூடலர் முனைகள் சாய" என்று கூறினார் என்று கருதுகின்றார். இக் கருத்து அவருக்குச் சொந்தமான கருத்தன்று. அறிஞர் மீனாட்சியம்மையாரின் கருத்தேயாகும். பல ஆண்டுகளுக்கு முன் ஆராய்ச்சிக்கு வேண்டிய துணைகள் அதிகங் கிடைக்காத காலத்தில் நுணுகி ஆராயாமல் ஏற்பட்ட குறைபாடேயாகும். "கூடலார்" என்பதற்குப் பகைவர் என்பதே பொருளன்றி கூடர்-இராட்டிரகூடர் என்னும் பொருளில்லை. அங்ஙன மிருக்கவும் அதனையே இன்றும் எழுதுதலும் பாடலிலமைந்துள்ள சொற்கிடக்கைகளையும் பொருளையும் ஆராயாமல் மீண்டும் மீண்டும் தவறான கருத்துக்களைக்கூறுதல் ஏற்புடைத்தன்று. வரலாறு எப்பொழுதும் கருத்துக்கள் மாறுபடக்கூடியனவே. அவற்றுள் கசடற அறிதலே கற்றதனால் ஆயபயனாகும். இதனுட் கூறப் பெற்றுள்ள மூன்றும் கருத்தினை வெளியிட்டு இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. அதற்கு மறுப்புக் கூறினார் இதுவரையில்லை. நாம் இராசசிங்கனே கழற்சிங்கனென்று முடிவுசெய்துள்ளபடியால் குருக்கோட்டைப்போர் கழற்சிங்கனால் செய்யப்பட்ட போரன்று. இராசசிம்மன் காலத்தில் போர் நடந்தில எனினும் அவன் தந்தை பரமேசுவரன் காலத்திறுதியில் விக்கிரமன் I என்னும் மேலைச் சளுக்கிய மன்னன் தன் தந்தையின் கட்டளைப்படி பல்லவநாட்டில் படையெடுத்து வந்தான். பல்லவன் எதிர்த்து அப்போரில் வெற்றிபெற்றான். தன் நாட்டைப் பிறர்க்கு விடாமையே இவன் பெற்ற வெற்றியாகும். இவன் கி. பி. 680-ல் ஆட்சியேற்றான். அக்காலமே தனக்கு வாய்ப்பாகக்கருதி விக்கிரமன்

1. பெரிய புராணம். பூசலார் புராணம் பாடல். 4.
2. " " " 5.
3. " " " 9.

போர்தொடுத்திருக்கலாம் இது கி. பி. 680—681-ல் நடைபெற்றதுபோலும். இதுபோன்ற போர்கள் அடிக்கடி பல்லவராட்சியில் நிகழ்ந்துள்ளதால் நாட்டில் அடிக்கடி வற்கடம் தோன்றிற்று. இதுபோழ்து பல்லவ நாட்டில் கி. பி. 686 முதல் 689 வரை "பெரிய வற்கடம்" இருந்தது என்று ஒரு சீனநூல் கூறுகின்றது" என்று இராசமாணிக்கம்பிள்ளை அவர்கள் பல்லவ வரலாற்றில் கூறியுள்ளதாலும், முன்னுள்ள சான்றுகளாலும் இராசசிம்மன் காலத்திலேதான் நடந்த நிகழ்ச்சிகளிவை என்று சேக்கிழார் கூறியுள்ளார் என்பதும் நனி விளங்கும். இவன் கி. பி. 710 வரை யாண்டவனுவன்.

இதுகாறும் கூறியவாற்றால் நந்திவர்மன் பெயரானும் சமயத்தாலும் செயல்களாலும் கழற்சிங்கனன்று என்பதும் மூன்றும் நந்திவர்மன் பெயர் சிங்கனன்று என்பதும் வைணவன் என்பதும், இவன் காலத்தில் ஆரூர், நின்றவூர் நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை என்பதும், இராசசிம்மனே கழற்சிங்கனென்னும் பெயராலும் சமயத்தாலும், திருவாரூர் நின்றவூர் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருந்தான் என்பதும் சுந்தரர், நம்பியாண்டார்நம்பி, சேக்கிழார் முதலியோர் கருதியது இவனையே யாகும் என்பதும் நன்குவிளக்கப்பட்டனவாகும்.

---

## இனியன் யார்?

உலகைப் படைத்தும் காத்தும் அழித்தும் வருகின்ற அலகிலா விளையாட்டுடை ஆண்டவன் ஒருவனே இனியன் என அப்பரடிகள் கட்டுரைக்கின்றார். அவன், நமக்கு இனிமையான பொருள்களென்று கருதுகின்ற கனிகளினும் இனியன்; கரும்புக்கட்டியினும் இனியன்; இளநங்கையினும் இனியன்; பேரரசினும் இனியன்; இவ்வாறு அவன் எல்லாவற்றினும் இனியனுய், என்னினும் இனியனுய் இருக்கின்றான். அவன் அருளாலே அவன்தாள் வணங்கி நாம் உய்யவேண்டுமென அருள்கின்றார். அவ் அருள்மொழி:

"கனியினும் கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க்குழல் பாவைநல் லாரினும்
தனிமுடிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே."

என்பதாகும்.

—செல்லூர்க்கிழார்.

---

# புதியன புகுமேல்!

[செல்வி C. தேவி M. Sc. நாகர்கோவில்.]

நாஞ்சில் நாட்டின் நற்றமிழ்ச் செல்வி!

வஞ்சி நாடதனில் நஞ்சை நாடெனச் செந்தமிழ் வழங்கும் நின்னகரருகே வாழும் பெரியார் ஒருவர், வரைந்த சில கருத்துரைகள் திருக்குறளொடு துயில் கொள்ளும் என்னைத் தட்டி எழுப்பவும் ஆன்றவிந்தடங்கிய சான்றோரின் செந்தமிழ்ப்பற்று, என்னே! இந்நிலையுற்றதெனத் தன்னிலைமறந்து இவ்வண்ணம் வரையலாயினேன்.

"........ஒருகால் திருவள்ளுவர் சைவராகவோ, வைணவராகவோ, சமணராகவோ, பௌத்தராகவோ இருக்கலாம். அவர் சமணராகவே இருக்கவேண்டும்! அதற்குரிய காரணங்களைப்பற்றி இங்கு நான் விரித்துக்கூற விரும்பவில்லை....திருவள்ளுவர் அர்த்த சாத்திரம்படித்துத் திருக்குறள் இயற்றியிருந்தால் அதுகுறையா? இழிவா?...........பகைவனுன அயலான் வீட்டு மலர்ச்செடிகளினின்று நறுமணம் வீசுகின்றது. அது புகாதபடி தம் வீட்டுக் கதவை அடைப்பாருண்டோ?" எனும் இன்னோரன்ன நலனற்ற கருத்துரைகளைப் புலமை உள்ளமே வரைய முற்பட்டால் என்னனைய தமிழ்மகளிர் எந்நிலை எய்துவர்? ஆராய்ச்சி என்றமைக்கும் வரன்முறையும் வரம்பும் இலவோ என்னில் வள்ளுவர் குறளும் வாய்திறக்குமன்றோ?

இதுவோ தங்காய் தமிழின் இயற்கை!

வணக்கம்.

இவ்வண்ணம்,

நின் இலங்கைத் தோழி.

தகைசான்ற தமிழ்மீது எல்லையிலாத தனிப்பற்றுடையோர் எண்ணிலர் ஏனினும், தமிழ் இலக்கியங்களின் பண்பு பிறழ்ந்து விடாவகை அவற்றின் தூய்மையிலே தோய்ந்த தாய்மார்கள் சிலர். அக்குழுவிற்குச் செவ்வொளிவீசிச் செம்மைத் தமிழை எம்மனோர்க்குரித்தாக்க உழைக்கும் உயர் தமிழ்ச் செல்வி! நின்னை வாழ்த்தி வணங்குவேன். நின் வரைவினிற் றோன்றிய, வள்ளுவர் குறளைப் பற்றிய வனப்பற்ற வன்மொழிகளைத் 'தமிழ் மகள்' எனப்பெயரிய, நின் எழிலுறு தேயமாய யாழ்நகரை

யடுத்த வண்ணார்பண்ணையினின்றும் வெளிப்போந்த ஆண்டு மலரின் அகத்துக் கண்டேன். பன்னாளின் முன்னர்ப் பண்பொடு வாழ்வு நடாத்திய நற்பெரும் தவத்தராய நான்மறையனைய வள்ளுவருக்கும் சமயம் காட்டிய புலவர்மணியை எவ்வண்ணம் புகழ்வதெனை அறியா தலமருகின்றேன்! இருபெரு உள்ளங்களில் கருத்து ஒற்றுமை சிறிதளவு நிலவுமேல் போதிய சான்றுக ளின்றி முதல்நூல், வழிநூல் என்று தொடங்கிவிடும் அண்ணல் கள் கவிமணிகள் எனினும் கருத்துச் செல்வ மணிகள் அல்ல என்னல் மிகையன்று. சான்று பலகாட்டி நிலைநிறுத்தலாம்.

"காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி யிருந்த காமமலா
மாலை மலர்ந்து பொருமலொரு மாயை நாம மணிவல்லி"
(பிரபுலிங்க லீலை—பிரபுதேவர்வந்த கதி-56)

எனும் செய்யுளில் திருக்குறட் சொற்றொடர் அமைதல் நோக்கி, வள்ளுவரும் சிவப்பிரகாசரின் வழித்தோன்றல் என வரைவ மேல் வானம் பெய்யாது வளம் பிழைப்பு உற்றுவிடும், நீணில வேந்தன் கொற்றமும் சிதைந்துவிடும், என அஞ்சுவல். என்னையோவெனில் பெற்றதாயினும் பிறந்த பொன்னாட்டினும் நற்றவவானினும் நனி சிறந்தது நந்தமிழ்ப் பெருமொழியன்றி, அதன் இலக்கியமும் இலங்குவெண் பிறையுமன்றோ? சமணர் காலம் யாது? வள்ளுவர் வாழ்ந்த பொன்னாட்கள் யாவை? சொல்லிசைச் செல்வர் திரு. S. சோமசுந்த பாரதியார் M.A.B.L., ஏறக்குறைய பதினைந்து யாண்டுகளின் முன்னர் சான்றுகளுடன் வெளியிட்ட திருவள்ளுவர் காலம் பற்றிய கட்டுரையினை நம் கவி மண்ணி காணாது சென்றது விதியின் திறனோ? அறிகிலேன். பாக்களின் நடைகொண்டு அவற்றின் காலவரை செய்தல் இயலுமேயன்றி, விரும்பியவண்ணம் பண்டைக்காலப் புலவரின் வாழ்க்கை நலன்களை வெளியிடல் புலமைக்கு ஒவ்வாது போகு மன்றோ?

தோழி! இவைபோன்ற புதியன பல தோன்றி இலக்கிய மாணவியரைத் தீராத சிந்தனையுட்படுத்தி விடுகின்றன. விரும் பினையாயின் கூறுவன் கேளாய்.

திரு. M. ரம்போலா மாஸ்கரேனஸ் M.A., எனும் தமிழ்ப் பெரியார் வடமொழிச் சொற்களை வாரி இறைத்துப் பொருத்த மில்லா வகையிற் பெயர்புனைந்த "இலக்கியப் பொழில்" எனும் நூலகத்து, இறையனார் அகப்பொருள் எனும் களவியல் நூலினுக்கு உரைகண்டவர் இளம்பூரணரேயாகும் என நிறுவ முயலுகின்றமையும் புதியது புகுதல் என்பேன். இறையனார்

களவியல் உரையில் அமைந்த சில சொற்றொடர்களும், உரைப் பகுதிகளும், இளம்பூரணரின் சொல்லதிகார உரையில் யாம் காண்கின்றமையின், அவ்வுரை உரையாசிரியர் எனப்பெயரிய இளம்பூரணரதாயிருத்தல் வேண்டுமென்று நியதி கூறுகின்றமை எண்ணுதற்குரியது. களவியல் முதற்சூத்திரவுரையில் என்மனார் எனும் சொல்லுக்கு என்ப என்னும் முற்றுச்சொல் குறைக்கும் வழி குறைத்தல் என்பதனால் பகரம் குறைத்து, விரிக்கும் வழி விரித்தல் என்பதனால், மன், ஆர் என்பன இரண்டிடைச் சொற் பெய்து விரித்து என்மனார் என்றாயிற்று என முடித்துக் கூறப் பெற்றுள்ளது. களவியல் உரைகாரர்களுக்கும் உரிய அபிப்பிராயத்தை சேனாவரையர் உரையாசிரியர் அபிப்பிராயம் எனக் கொள்வதினாலேயே உரையாசிரியர் களவியற்கு உரைவகுத்தவர் என்பது சேனாவரையருக்கு உடன்பாடாகத் தெரிகிறது" என்கிறார்.

இவ்வாராய்ச்சி அண்ணலின் அரியகொள்கைகளைக் காணுங்கால் தமிழ் இலக்கியங்களின் தகைசான்ற தன்மைபற்றிப் பொறுமையுடன் சிந்தனை செய்தல் வேண்டும். 'நக்கீரர்' களவியலினின்றும் மறைந்து, இளம்பூரணர் தோன்றினால் பழைமை இலக்கிய உலகிற்றிளைக்கும் நுண்ணறிவுடைய சான்றோர் என் சொல்வரென அறியோம்.

அஃகி அகன்ற அறிவின் திறனால் தமிழ் இலக்கியத்தினின்றும் பற்பல உண்மைகள் வெளிப்படல் வேண்டுவதெனினும் 'மின்னுவதெலாம் பொன்னாமோ' என்றாங்கு யாவையும் ஏற்றுக் கோடல் சாலாது என்போம். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு. எனில் அவ்வுயர்ந்தாரன்றோ மொழியின் விதியினை விலக்க விழைதல் சால்புடைத்து.

என்றும் வற்றாத செந்தமிழ் ஊற்று எனும் உ. வே. சாமிநாத அய்யர்கூட நினைக்க இயலாத பல புதுமைக் கருத்துக்கள் சில யாண்டுகளாக வெளியிடப் படுகின்றமை நோக்கி, ஆவலுடன் அத்துறையண்மி, இலக்கிய உண்மை காணும் பெருவிருப்பினராவோம். [சென்னையில் அண்மையில் சிலப்பதிகார மாநாடொன்று கூட்டப்பெற்றது. தமிழ் நாட்டு அறிஞர்களின் சீரிய தலைமையில் நடாத்தப் பெற்றது. அந்நாள் சிலப்பதிகாரச் சிந்தனையாளர் ஒருவர் மக்கள் நடுவே வீற்றிருத்தலும், சொற்பொழிவோர் விடுத்த சில கருத்துக்கள் தம்முடையனவற்றிற்கு மாறுபட்டுத் தோன்ற, விரைந்தெழுந்து வீட்டையண்மி, புதியன புகும் நூலொன்றினையாத்தனர். தமிழ் இலக்கியச் சோலையின் நாப்பண் தவழ்ந்து திரியும் என்னனைய மாணவர் அந்நூலின் உண்மையினை அறியலாயினர். பழமையிற்றோயும் எம்மனோர்

புதுமையில் மூழ்க விழைந்த அப்பெரியார் பச்சையப்பன் கல்லூரியின் தமிழ்த் தூண்களிலொன்று.

" எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன்.................."

(வழக்குரை காதை 51-52)

" அறனெறி செங்கோல் மறநெறி நெடுவாள்
புறவுநிறை புக்கோன் கறைஃவழுறை செய்தோன் "

(கட்டுரை காதை—57-58)

எனும் இவ்வரிகளும் அவற்றுள் நுழைந்த சிபி எனும் மன்னனின் திருப்பெயரும் ஆசிரியர் ஆச்சாரியார் எண்ணத்தினை இழுத்தன போலும்! சிபி எனும் சீரியோன் வடநாட்டினன். எனவே தென்னாட்டின் இன்தமிழினுக்கு உரியானல்லனுகலின் அவன் வழிவந்தவன் சோழன் என்றமை தாங்கொணுப் பிழையன்றோ? கழுவாய் இலா இக்கட்டுரையினை என்செய்வதென ஏங்குவது உண்மை எனினும், புறவுக்காக வருந்திய நல்லானைப் பற்றித் தமிழ் இலக்கியங்கள் பலபட நவிலுகின்றமை ஆச்சாரியரின் ஆராய்விற்குரியதன்றோ?

"........................உலகறியக்
காக்கும் சிறுபுறவுக் காகக் களிகூர்ந்து
தூக்கும் துலைபுக்க தூயோனும் "

(விக்கிரமசோழன் உலா 11)

" கொலையே றுடம்படையக்
கொய்தாலு மெய்தாத்
துலையேறி வீற்றிருந்த தோன்றல் "

(குலோத்துங்க சோழன் உலா 17)

"..............புக்கால்
மருனிறை யென்று சரணடைந்த வஞ்சப்
புருநிறை புக்க புகழோன் "

(இராச ராச சோழன் உலா 6)

உலா இடைக்கால நூல் எனக்கொளினும் அதனினும் மிகப் பழமைப் புறநானூறும் சிபியைச் செப்புமாகில் அது நற்சான்றன்றோ?

" புள்ளுறு புன்கண் தீர்த்த வெள்வேல்
சினங்கெழு தானைச் செம்பியன் மருக!" (புறம் 37)

" புறவின் அல்லல் சொல்லிய கறையடி
யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக்
கோனிறை துலாஅம் புக்கோன் மருக!" (புறம் 39)

"கூருகிர்ப் பருந்தி னேறுகுறித் தொரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி யஞ்சிச் சீரை புக்க
வரையா வீகை யுரவோன் மருக!" (புறம் 43)

"நீயே, புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை!" (புறம் 46)

"புறவு நிறைபுக்குப் பொன்னுலகு மேத்தக்
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் யாரம்மானை
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் முன்வந்த
கறவை முறைசெய்த காவலன் காணம்மானை"
(வாழ்த்துக்காதை—29—சிலப்பதிகாரம்)

இன்னும் எண்ணரிய இலக்கியங்கள் அவ்வரலாற்றினை மேற் கொள்கின்றமை காணலாகும்.

"இன்னுயிர்க்கு மன்னுயிரா யிருநிலங்காத் தாரென்று
பொன்னுயிர்க்கும் கழலவரை யாம்போலும் புகழ்கிற்பாம்
இன்னுயிர்க்கு நெடுவேலாய் இவர்குலத்தோன் மென்பறவை
மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாறாக வழங்கினனால்"
(வீபீஷணன் அடைக்கலப்படலம்—110)

"பிறந்தநாட் டொடங்கி யாரும் துலைபுக்க பெரியோன் பெற்றி
மறந்த நாளுண்டோ என்னைச் சரண் என்று வாழ்கின்றானை"
(கும்ப வதைப்படலம்—335)

"புக்கடைந்த புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க
மைக்கடங்கார் மதயானை வாள் வேந்தன் வழிவுந்தீர்"

என்பன இலக்கியச் சான்றெனலாம். இவண், "காவிரி நாட்டைச் சிபிதேசம் என்று கி. பி. 7-ம் நூற்றாண்டு வாழ்ந்த தண்டி தமது தசகுமார சரித்திரத்திற் கூறியிருத்தல் கவனிக் கத்தக்கது," எனும் பெரியார் ஒருவரின் கூற்றும் நினைத்தற் குரியது.

நிற்க, ஆசிரியர் M. இராசமாணிக்கனார் வரைந்த சோழர் வரலாறு எனும் நூலில்—"பதினொன்று பன்னிரண்டாம் நூற் றாண்டுகளில் வாழ்ந்த ஒட்டக்கூத்தர், சேக்கிழார் ஆகிய புலவர் கள் இவனை (மநு), மநுநீதிச்சோழன் என்றே கூறிப்போந்தனர். மநு,—மநுநீதி—மநுநீதி நூல் என்னும் பெயர்கள் சங்க நூற் களிற் காணுமாறில்லை. செவ்விய செங்கோலோச்சிய நம் சோழற்கு மநுநீதிச்சோழன், மநு என இவனது செயல் நோக்கிப் பிற்காலத்தார் இட்ட பெயரினையே செயங்கொண்டார் முதலிய புலவர் வழங்கினராதல் வேண்டும். இச்சோழனை,

'அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்,' என, சிலப்பதிகாரமும், 'மகனை முறைசெய்த மன்னவன்' என மணிமேகலையும் குறிக்கின்றனவேயன்றிப் பெயராற் குறிக்கவில்லை" என்ற பகுதி காணப்படுகின்றது—இவ்வுண்மை ஆச்சாரியாரின் புதியன புகுந்த சிலப்பதிகாரச் சிந்தனையினுக்குச் சான்று பகரலாம்.]

சங்க கால இலக்கிய இலக்கணங்களில் பெரும்பான்மையும் வழுவமைதியை யாம் நினைவுகொளுந் தேவை எழுகின்றமை உண்மையாகும். செய்யுளான் நூலியற்றிய நுண்ணறி புலவர் அங்ஙனம் காலவழு, பால்வழு, ஒருமைப் பன்மை வழு நிலவ வரையலாமாயினும் உரைநடையில் மற்றையர் அங்ஙனம் விடுத்தல் பிழையுடைத்தென்றே கொள்ளுதல் வேண்டும். மழை வருகிறான் என்று ஒரு மாணவி வரைவளாகில் அவள் இலக்கிய வாழ்வு மலராது, போதாகி அழிதல் இயற்கை எனினும், இருபதாம் நூற்றாண்டில் வெளிப்போந்த சில தமிழ் நூற்கள் இலக்கண அமைதிகளை மறந்துவிட்டன. இன்றேல் மறைத்து விட்டன என்பேன்.

'என் துணையே, தன் திருவடி தொழும் என்னைத் தள்ளாதீர்கள். தன்னை மறவா என்னை மறவாதீர்கள் எனும் சொற்றொடர் 'மனைவியின் உரிமை' எனும் நூலகத்துளது. 'நும்மை மறவா என்னை மறவாதீர்கள்' என்பது ஆசிரியர் கருத்து. குறுந்தொகையும் கலித்தொகையும் தொல்காப்பியமும் நினைவினில் வைப்போர் ஈண்டு வருந்துவர். தன்னை என்றசொல் ஒருமையானல் மறவாதீர்கள் என்ற பயனிலை எங்ஙனம் அமையலாம்? 'தானும், தேரும், பாகனும் வந்தென் நலனுண்டான்' இதுஎட்டுத் தொகை நூலின் சொற்றொடர். தான் என்றால் நீ என்ற பொருள் இல்லையன்றோ? கலித்தொகையின் சுடர்த்தொடீஇ கேளாய் எனும் செய்யுளில் தோன்றும் தன்னை என்ற சொல் அவனை என்றன்றோ பொருள் படுகின்றது. 'ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே' எனும் வரியினை மறுமொழியாகப் பகரலாமெனினும், அது பொருந்தாதென்பது நன்னூல் விருத்தியுரை விளங்கக் கூறும். இவைகளை மறுமலர்ச்சியாளரும் புதியன புகுத்துவோரும் சிறிது ஆய்ந்துகொள்ளத் தாழ்மையுடன் வேண்டுவேன். நற்றமிழின் நல்வாழ்வு நல்லாட்சியிலேயே தங்கியுள்ளது. சொற்களைத் தமிழ்மரபு கடவாமல் காத்தல் மண்டிணி ஞாலத்து மக்கட்கெல்லாம், உண்டியினும் உயர்ந்ததொன்றாகும்.

சென்ற யாண்டு யாழ்பாணத்தில் நடந்தேறிய தமிழ் விழாவில் 'கம்பர் காட்டிய தமிழ் நாகரிகம்' எனும் பொருள் பற்றி அந்நாட்டுப் புலவர் பண்டிதர் பெரியதம்பிப் பிள்ளை எனும்

பெரியாரொருவர் சொற்பொழிவாற்றியமை என்னனைய கம்ப ராமாயண விருப்பினருக்குச் சிலபுதிய கருத்துக்களை அளித்தது. வெகுண்ட இலக்குவனிடம் இராகவன் பேசுகிறான். "தென் சொற் கடந்தான் வடசொற் கடற்கெல்லை தேர்ந்தான்" என்பது கம்பன் செய்யுள் வரியாகும். தென்சொற் கடந்தான் என்ற தொடரைக்கொண்டு "ஆரிய மன்னனாகிய இராமன் தமிழும் கற்றுமுடித்தவன்—ஆனால் வடமொழியைக் கடக்க இயலாது எல்லையினையே கண்டான்" எனும் பொருள் படச் சொல்மாரி விடுத்தனர். "காவிரி நாடன்ன கழனி நாடு" எனக் கம்பன் கழறினனே அன்றிக் காவிரி நாடு கழனி நாடென யாண்டும் கூறாமையானும், இராமன் தமிழ்மொழியை நன்றாகத் தெரிந் திருந்தான் என்றல் மிகையாகலானும், அப்புலவர் விளக்கங் களும் புதியன புகுதலின் பாற்படும்.

"அன்னாய்! இவன் ஒருவன் செய்ததுகாண் என்றேனா"— இது கலித்தொகை. சென்றான் என்ற ஆண்பாலினுக்கு சென் றாள் பெண்பாலாதல்போல, ஒருவன் என்றமைக்கு ஒருவள் என்றால் எழும் இழுக்கு என்னை என்கிறாள் என் புதுமைத் தோழியொருத்தி. ஒருவன் ஒருத்தி என்னலே அற்றை நாட் டொடங்கி இலக்கியங்களில் காணப்பெறும் தமிழ்மரபு. அதனை மாற்றும் பெற்றி எம்மனோர்க்கு எங்ஙனம் அமையும்? தமிழ் நாட்டிலே நிலவும் பெரும்பான்மையான பத்திரிகைகள் 'அல்ல' என்ற பன்மை முடிபினை ஒருமையாகவே மேற்கொண்டுள்ளமை யினை யார்க்கெடுத்துரைப்பேன்? இந்நிலை நீளுமேல் இலக் கண நூற்களே மாய்ந்துபோகலாம். அன்றும் அலவும் ஒன் றெனில் உண்டோ ஞாலத்து ஒரு மொழி என்னல் வேண்டும்.

என்னருந்தோழி! மேற்கிளந்தாங்கு எண்ணரும் மாற்றங் கள் தமிழ் மொழியின் மரபினுக்கு ஒவ்வாவண்ணம் எழும்புகின் றன. இலக்கியச்சோலையில் நுழையும் சிறுவர் நிலத்தியல்பால் நீர் திரிந்தாங்கு இப்புதியன புகுதலால் செம்மை சான்ற இலக்கியத் தூய்மை தவறி இடர்ப்படுகின்றனர். காவியச்சோலைக் கம்பனும், புலமை வழியும் புறநானூற்றுப் புலவோரும் தெள்ளுதமிழ் வள்ளுவனும், இந்நாள் நம்மிடைத் தோன்றாது போகினும், அன்னார் விடுத்த அருமை நூற்கள் செவ்விதின் வாழ நம்மவர் உழைத்தால் அது இயலாத தொன்றன்று. புதியன புகுதல் மேம்பாடாகலாம். ஆனால் பழையனவற்றிலும் நற்பண்பு நில வினால் நானிலத்தார் ஏன் அதை நச்சுதல் கூடாது? பொய்ம்மை பொலியும் சிலவற்றை இடைக்காலத்தார் இயற்றினர் என்ப. ஆம், அருணகிரிநாதரும், தாயுமானவரும் தனித் தமிழ்ப் பற்று டைய மறைமலையடிகளாக, இலங்காது மறைந்தமை வருந்துதற்

குரியது! வள்ளுவரும் அவர் வழி வந்தோரும் வாழ்நாட் குறிப்பு வரைந்து எம்மனோர் துய்க்கும் பெற்றியுடன் விடாது போனது, புத்தேரிப்புலவர் மணியை நின் வரைவிற் கண் டாங்கு, வள்ளுவரைச் சமணராக்கிக் கட்டுரை வாயிலாக வெளியிட வழி வகுத்தது. என்னே காலத்தின் செலவு! யார் எவ்வுரை கழறினும் மெய்ப்பொருள் காண்பதறிவு. என்னில், வள்ளுவப் பெருமகன் சமணனும் அல்லன்.

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி"

"பரந்து, கெடுக உலகியற்றி யான்,"

"அடியளந்தான், தாஅய தெல்லாம் ஒருங்கு,"

"தாமரைக் கண்ணான் உலகு"

என வரைந்த வள்ளுவரைச் சமணர் என்று கூறுதல் யாங்ஙனம்? நுண்ணறிவுடைய நூலொடு பழகிய, இலக்கிய உலகத்து, சுடர் விட்டு இலங்கும் செஞ்ஞாயிற்றுச் சுடர்மணியே திருக்குறள் வகுத்த வாய்மையோன். இதனை வல்லார்வாய்க் கேட்டல் வேண்டும். வணக்கம்.

---

## வள்ளுவர் வாய்மொழி

வள்ளுவரால் வகுக்கப்பட்ட உண்மை அறநூல் திருக்குறள். இதன்கண் பலதிறப்பட்ட நாட்டு மக்கட்கும் பொதுவான அறங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதில் வகுத்துக் காட்டாத அறங்கள் வேறெந் நூலினும் இன்று. இதைக் கற்போர் கலைஞராகலாம்; கவிஞராகலாம்; அறவோராகலாம்; அந்தணராகலாம்; இதை அவர் தம் காலத்திருந்த அறிஞரே நன்கு கண்டு தெளிந்திருந்தனர். இதனை ஒரு புலவர் பாராட்டிக் கூறுவதாவது:

'சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள் வெண்பா.'

என்பதாகும்.

—செல்லூர்க்கிழார்.

---

# தமிழ் நெடுங்கணக்கு - பெயரும் எண்ணும்

[இராவ்சாகிப், சைவப்புலவர்
டாக்டர். தி. இரா. அண்ணாமலைப் பிள்ளை
L.C.P.S, L.M S.S.A. Lond. (குற்றாலம், தென்காசி)]

(செந்தமிழ்ச்செல்வி—சிலம்பு உகூ; பரல் ரு; உகூஉ-ம் பக்கத்தொடர்ச்சி.)

*தமிழ் நெடுங்கணக்கைப் பற்றிய பொதுக் குறிப்புக்கள் ஒருவாறு முற்றுப்பெறுவதற்கு முன், தமிழ் எழுத்துக்களின் உருவ அமைப்பையும், மொத்த எண்ணையும் பற்றிய சில நுண்ணிய குறிப்புக்களை இவண் எடுத்துரைப்பது சால்புடைத்து.*

தமிழ் எழுத்துக்கள் 12+3+18+216=249

*தமிழ் எழுத்துக்களின் எண்ணை, பற்பல காரணங்களைக் கொண்டு, பலவாறு கணக்கிடுவர்; ஆயினும், உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு, சார்பெழுத்து மூன்று, உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு ஆக இருநூற்று நாற்பத்தொன்பது (249) என்று கொள்வதே வழக்கில் இருந்து வருகிறது. இவ் இருநூற்று நாற்பத்தொன்பது எழுத்துக்களையும் எழுதிப் பழகும் தமிழ் மாணவன், 249 புதிய எழுத்துக்களை எழுதிப் பழகுகின்றானா? அல்லது எழுத்துக்களின் வடிவத்திலேயே ஒற்றுமைப் பகுதிகள் காணப்படுகின்றனவா? இங்ஙனம் காணப்படுமாயின், 249 எழுத்துக்களையும் எழுதுவதற்கு வேண்டிய முயற்சியை எங்ஙனம் கணக்கிடலாம் என்று ஆராய்வதே இச்சிற்றுரையின் நோக்கமாகும். சிறு சான்றினால் எடுத்துக் காட்டுதும். முப்பத்து மூன்று (எழுத்து வடிவத்தில் —31) எழுத்துக்களையும் பிழையின்றி எழுதக் கற்றுக்கொண்ட மாணவன் ஒருவன், க, கா, கி, ..........என்று 18 ககர உயிர்மெய்யும் எழுதியபின் ககரஒற்றை எழுதுகிறானென்று வைத்துக்கொள்வோம். ககர ஒற்றை எங்ஙனம் எழுதுவதென்று மாணவன் ஆசிரியரைக் கேட்கும்பொழுது, ஆசிரியர் கூறுவதென்னை? "மகனே, ககரம் (க) எழுதினாயல்லவா? அதன்மேல் ஒரு புள்ளிவைத்து விட்டாயானால், அதுதான் 'க்' 'இக்கென்னா' ஆய்விடும் என்று கூறுவரேயன்றி, அதைத் தனி எழுத்தாகச் சுட்டி எழுதிக் காட்டுவதில்லை. ஆகவே, ககர சகர டகர முதலிய அகரம் ஏறிய பதினெட்டு உயிர்மெய்களைக் கற்ற மாணவன், பதினெட்டு மெய்களை எழுதுவதற்கு, ஒரே ஒரு* புள்ளி *வைப்பதைக் கற்றுக்கொள்கிறான்—இதைக் குறிப்பாய் உணராது, அகரமேறிய உயிர்மெய்—18, ஒற்றெழுத்து—18 என்றுகொண்டு 36 எழுத்து என்று கணக்*

இடுவோமாயின் அது பொருத்தமா? 'கௌ' எழுதப் படித்துக் கொண்ட மாணவன், 'சௌ' எழுதப் படிக்கிறான். ஆசிரியர், இயற்கையாய் எங்ஙனம் 'சௌ' எழுதக் கற்பித்துக் கொடுப்பர்? "தம்பி, 'கௌ' எழுதினையல்லவா, அதேபோன்று, 'ச' எழுதி முன்னர் 'ெ' என்ற குறியையும், பின்னர் 'ள' என்ற குறியையும் வைத்துவிடு. அது 'சௌ' என்றாய்விடும்' என்றுதானே சொல்லுவர். இங்ஙனம் 'கௌ' 'சௌ' எழுதப் பழகிய மாணவன், ஔகாரமேறிய உயிர்மெய் பதினெட்டையும் ஒரே வேளையில், எழுதப் பழகி விடுகிறானல்லவா! இதை மறந்து, கௌ, ஙௌ, சௌ, ஞௌ என்று பதினெட்டுப் புதிய எழுத்துக்களை எழுதிப் பழகுகிறவனைக் கொள்வது அறிவுக்கும் உண்மைக்கும் பொருந்தாது என்பதே எமது கொள்கை.

சுருங்கக்கூறின், ககர, ஙகர, சகர, ஞகர முதலிய வரிசையை எழுதத் தெரிந்த மாணவன், பதினெட்டு மெய்களை எழுதுவதற்கு, (.) புள்ளி ஒன்றையே எழுதப் படிக்க வேண்டும்: இங்ஙனமே 'கௌ' எழுதத் அறிந்துகொண்டவன், ஙௌ, சௌ, ஞௌ முதலிய பதினெட்டு (ஔகாரமேறிய) உயிர்மெய்களை எழுதுவதற்குப் பழகவேண்டிய குறிகள் இரண்டே, 'ெ' ஒன்று, 'ள' இரண்டு. இங்ஙனமாக, 219 எழுத்துக்களையும் எழுதுவதற்கு, அரிச்சுவடி எழுதிப்படிக்கும் மாணவன் எடுத்துக் கொள்ளும், எழுத்து முயற்சியின் கணக்கென்னை என்பதை இங்குச் சிந்திப்பாம். இதை அடுத்துள்ள அரிச்சுவடி அட்டவணையை நேர் வரிசையிலும், நிரைநிரையாயும் உற்று நோக்குக.

மேலே காட்டிய அட்டவணையை பன்முறை கூர்ந்து கண்ணுற்றபின், எழுத்துக்களின் வடிவத்தையும், தனித்தனியே, ஊன்றி நோக்கல் வேண்டும். மிக எளிய முறையில் விளக்குவதே எமது எண்ணம்.

## உயிர் எழுத்துக்கள்—12

மாணவன் 'அ' 'அகரம் எழுதக் கற்றுக்கொண்டான். 'ஆ' எழுத முயல்கின்றபொழுது, ஆசிரியர் கூறுவதென்னை "அப்பா, 'அ' எழுது: பின்னர் 'அ' எழுத்துக்குக் கீழே, ஒரு சின்ன வட்டம் எழுதுக; அதை அகரத்தின் கடைசிப் பாகத்தோடு வளைவாய்ச் சேர்த்துவிடு; இது "ஆ" ஆய்விடும் என்று கூறுவர். அகரம் எழுதுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியில் நாலில் ஒரு பங்கு முயற்சிதான் 'ஆ'காரம் எழுதுவதற்கு எடுத்துக் கொள்கிறான்.

இகரம்—'அகரத்தில் நேர்கோட்டை விட்டுவிட்டு, அகர எழுத்தில் முதலிற் றொடங்கும் வட்டத்தைச் சுற்றிக் கொண்டு வந்துவிடு' என்று சொல்வர். ஆகவே, இகர எழுத்தில், பாதிக்கு

# தமிழ் நெடுங்கணக்கு அரிச்சுவடி

அரிஓம் நமசிவாய - அரிஓம் நமோத்து சிந்தம் - குருவே துணை

| | ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ | ௭ | ௮ | ௯ | ௧௦ | ௧௧ | ௧௨ | ௧௩ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
| 1 | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ | க் |
| 2 | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ | ங் |
| 3 | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ | ச் |
| 4 | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ | ஞ் |
| 5 | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ | ட் |
| 6 | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ | ண் |
| 7 | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ | த் |
| 8 | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ | ந் |
| 9 | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ | ப் |
| 10 | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ | ம் |
| 11 | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ | ய் |
| 12 | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ | ர் |
| 13 | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ | ல் |
| 14 | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ | வ் |
| 15 | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ | ழ் |
| 16 | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ | ள் |
| 17 | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ | ற் |
| 18 | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ | ன் |

மேல், அகர வடிவமே இருக்கின்றது. ஆனால் நேர்கோட்டை எழுதாமல், ஒரு வளைவு (விலங்கு) இணைத்துவிட்டால் அது இகரமாகும்.

இகரத்தை முடிக்கும்பொழுது, ஒரு சுழி சேர்த்துவிட்டால், அது ஈ .(ஈ) ஆய்விடுகிறது. ஆகவே, அகரத்திற் பாதியை எழுதி, பின்னர் ஒரு வளைவு வரைந்துவிட்டால் அது இகர மாகிறபடியால், அகர எழுத்து முயற்சியில், அரைப்பங்கு முயற்சியால் இகரத்தைக் கற்றுக் கொள்கிறான். ஈகாரத்துக்கு இகரத்தோடு ஒரு வட்டம் ஒன்றே சேர்க்கப்படுகின்றது. 'ஈ' பழங்காலத்தில் இகரத்தோடு ஒரு வட்டமே சேர்த்து எழுதப் பட்டு வந்தது. பின்னரே 'ஈ' என்னும் உருவத்தில் எழுதப்படு கின்றது.

இகரத்தை, ஒரு சுழி சேர்த்து ஈகாரமாய் எழுதுவதற்கு, ஒரு எழுத்து எழுதும் முயற்சியில் நாலில் ஒரு பங்குகூட அதிகம். உகரம் அகரத்தின் மேற் பாதிபாகத்தில் நேர்கோடு குறைந்தது; ஒரு சுழியும் ஒரு வரியும் சேர்ந்தது. உகரத்தை ஊகாரமாக்குவதற்கு, உகரத்தின் மேல் 'ள' என்னும் குறி எழுதப்படவேண்டும். அது ஒரு புதிய எழுத்தானபடியால், அதை ஒரு முழு எழுத்தாகக் கணக்கிடலாம். எ, ஏ இரண்டும் ஒன்றுபோலவே தோன்றும்; 'ஏ'காரத்திற்கு, 'கால்' ஒன்று சிறிது இணைக்கப்படவேண்டும். ஆதலின், 'ஏகாரம்' எழுதுவதற்கு எகரம் எழுதுவதில், காற்பங்கு முயற்சிதான் வேண்டும். (ஐ) ஒரு தனி உருவம். ஒ, ஓ, ஔ மூன்றும் ஓரெழுத்து முயற்சிதான் வேண்டும். 'ஒ' எழுதத் தெரிந்தால், ஒரு சுழியைச் சேர்த்துவிட்டால் அது ஓகாரமாகும். 'ஊ' எழுத்தில் உள்ள 'ள' என்னும் குறியை 'ஒ', சேர்த்து விட்டால் அது 'ஔ' ஆகிறது. அதற்கு வேறு முயற்சியே வேண்டாம். ஆய்தம் மூன்று புள்ளியை அடுப்புக்கட்டிபோல் எழுதிவிடவேண்டும். ஆகவே, உயிரெழுத்துக்கள் பன்னிரண்டையும் ஆய்தத்தையும் எழுதுவதற்கு வேண்டிய முயற்சியைப் பின்வருமாறு கணக்கிடுகின்றோம்.

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | $\frac{1}{4}$ | $\frac{1}{2}$ | $\frac{1}{4}$ | $\frac{1}{4}$ | 1 | 1 | $\frac{1}{4}$ | 1 | 1 | $\frac{1}{4}$ | .... | $\frac{1}{4}=7.$ |

ஆகவே, உயிர் பன்னிரண்டையும் ஆய்தம் ஒன்றையும் எழுதுவற்கு வேண்டிய முயற்சி, ஏழு எழுத்துக்களை எழுத வேண்டிய முயற்சிக்குமேல் இல்லை. இங்ஙனமே, மெய்யெழுத் துக்களின் உருவத்தைக் கூர்ந்து நோக்குவாம்.

(தொடரும்.)

# தமிழ்நாட்டு விளையாட்டு

## 4. பாண்டி

[ஞா. தேவநேயன்]

**ஆட்டின் பெயர் :** தமிழ் நாட்டில் தொன்றுதொட்டுச் சிறுவர் சிறுமியரால் விளையாடப்பட்டு வரும் பகற்கால விளையாட்டுக்களுள் பாண்டி என்பது ஒன்றாகும். இது, பாண்டி நாட்டில் பாண்டி என்றும், சோழ கொங்குநாடுகளிற் சில்லி என்றும், சேர நாட்டில் (மலையாளத்தில்) வட்டு என்றும், வழங்குகின்றது. இம் முப்பெயரும் ஒரு பொருட் பல சொற்கள் ; வட்டம் என்னும் பொருளன. இவ்விளையாட்டிற்குரிய கருவி வட்டமான கல் அல்லது ஓட்டுச்சில்லாதலால் இது இப் பெயர்களைப் பெற்றது. சோழநாட்டின் ஒரு பகுதியில் இது சில்லாக்கு என்றும் வழங்குகின்றது. (சில் என்னுஞ் சொல் ஆக்கு என்னும் ஈறு பெற்றுச் சில்லாக்கு என்றாயது.)

வட்டு என்னும் பெயர் ஒருவகைச் சூதாட்டையுங் குறிக்கும்.

> " அணிமலர் நறுந்தா தூதுந் தும்பி
> கையாடு வட்டில் தோன்றும்."

என்ற விடத்தும் (அகம். 108),

> " நிரையிருந்து மாண்ட அரங்கினுள் வட்டுக்
> கரையிருந் தார்க்கெளிய போர் "

என்ற விடத்தும் (பழமொழி 176),

> " சோழன் நலங்கிள்ளி தம்பிமா வளத்தானும் தாமப்பல்கண்ணனும்
> வட்டுப்பொருவுழிக் கைகரப்ப வெகுண்டு வட்டுக்கொண்டெறிந்தானை "

என்ற விடத்தும் (புறம். 43, கொளு),

வட்டு என்னுஞ் சொல் சூதாட்டைக் குறித்தது. ஆயின்,

> " பொரியரை வேம்பின் புள்ளி நீழற்
> கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்
> கல்லாச் சிறாஅர் நெல்லிவட் டாடும்
> வில்லே ருழவர் வெம்முனைச் சீறூர் "

என்ற விடத்தோ (நற்றிணை, 3),

வட்டு என்னும் சொல் பாண்டி விளையாட்டையே குறித்ததாகும். காட்டகத்துக் கல்லாச் சிறுவர் தமக்கு எளிதாய்க்

கிடைத்த பெரு நெல்லிக்கனியையே வட்டாகக்கொண்டு பாண்டி விளையாட்டை ஆடியிருக்கின்றனர்.

"அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்"

என்னும் குறளிற் கூறப்பட்டுள்ள உவமை, இருவகை வட்டாட்டிற்கும் பொதுவாம். அரங்கு கீறலும் வட்டெறிதலும் இரு விளையாட்டிற்கும் பொதுவாதலானும், அரங்கின்றி வட்டாடல் ஈரிடத்தும் இயலாமையானும், நூலின்றிக் கோட்டிகொளற்கு அவ்விரண்டும் ஒரு நிலையாய் ஏற்கும் உவமைகளாம். ஆயினும், திருவள்ளுவர் சூதாட்டைக் கருத்துட்கொண்டே இக்குறளை அமைத்தார் என்று கொள்ள இடமுண்டு.

ஆடுகருவி: அரையங்குலக் கனமும் ஈரங்குல விட்டமுமுள்ள வட்டமான ஓட்டாஞ்சல்லியும், பல கட்டங்களுள்ளதாக நிலத்திற் கீறப்பட்ட அரங்கும், இவ் விளையாட்டிற்குரிய கருவிகளாம்.

ஓட்டாஞ்சல்லிக்கு வட்டு, அல்லது சில்லி என்று பெயர். ஓட்டாஞ்சல்லிக்குப் பதிலாக மாக்கற்சல்லியும் பயன்படுத்தப் பெறும். ஆடுவார் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு வட்டுண்டு.

அரங்கு பொதுவாக, ஆறடி நீளமும் நாலடி அகலமுமுள்ள நீள் சதுரமும், அதன் ஒருபுறத்தில் அரை வட்டமும், கொண்டதாயிருக்கும். நீள் சதுரத்தில் ஆறு சம அளவான கட்டங்கள் அமையுமாறு நீளவாட்டில் ஒரு நடுக்கோடும் அகல வாட்டில் மூன்று குறுக்குக் கோடும் இழுக்கப்பெறும்.

கட்டத்தைத் தட்டு என்றும் அரைவட்டத்தைச் சமுத்திரம் என்றும் பாண்டிநாட்டிற் கூறுவர். அரைவட்டத்தின் உச்சியில் சிறுபான்மை வளைக்கப்பெறும் வளைவு கும்பக்குடம் எனப் பெறும். சோழ கொங்கு நாடுகளிற் கட்டத்தைக் கட்டம் என்றே கூறுவர். ஆயின், அரைவட்டத்தைக் கரம் என்பர். இனி, நீள் சதுரத்தின் நீளவாட்டில் நடுக்கோடிழாமலே, அதாவது, ஒற்றைக்கட்டங்களாக அமைத்துக்கொண்டே ஆடுவதுதான், சோழ கொங்குநாட்டுப் பெருவழக்காயிருக்கின்றது. அவ்வொற்றைக் கட்டங்கள், மூன்றிற்குக் குறையாதும் ஐந்திற்குக் கூடாதும் இருக்கும்.

ஆடிடம்: இவ் விளையாட்டிற்கு இன்ன இடமென்றில்லை. மேற்கூறியவாறு அரங்கு கீறற்கேற்ற திறந்த வெளி நிலம் தெரு விடம் வீட்டுமுற்றம் ஆகிய எவ்விடமும் இவ் விளையாட்டிற் கேற்றதாம்.

**ஆடுவார் :** இரு சிறுவர் அல்லது சிறுமியர் அல்லது ஒரு சிறுவனும் ஒரு சிறுமியும் இவ்விளையாட்டை ஆடுவர். இருவர்க்கு மேற்பட்டோர் இதை ஆடுவதில்லை.

**ஆடுமுறை :** உடன்பாட்டின்படியோ திருவுளத் தீர்ப்பின்படியோ யார் முந்தியாடுவதென்று துணிந்தபின், இருவருள் ஒருவர் ஆடத் தொடங்குவர். திருவுளத் தீர்ப்பெல்லாம் காசு சுண்டி அல்லது வட்டெறிந்து அறியப்பெறும்.

இரட்டைக்கட்ட அரங்காயின், ஆடுபவர் வெளிநின்று முதலாவது இடவரிசை முதற் கட்டத்தில் (அதாவது அடிக்கட்டத்தில்) தம் வட்டையெறிந்து நொண்டி யடித்து ஒரேயெட்டில் அவ்வட்டை மிதித்து, அதைக் காலால் முன்புறமாக வெளியே தள்ளி, மீண்டும் நொண்டியடித்து ஒரேயெட்டில் அதை மிதித்தல் வேண்டும்.

எறியப்பட்ட வட்டு (முதற்) கட்டத்திற்கப்பால் விழினும், கட்டத்திற்குள் விழாது கோட்டின் மேல் விழினும், நொண்டியடித்து ஒரேயெட்டில் வட்டைமிதிக்கத் தவறினும், கோட்டின் மேல் மிதிக்கினும், தூக்கிய காலைக் கீழே ஊன்றினும், காலால் வெளியே தள்ளப்பட்ட வட்டு ஒரேயெட்டில் மிதிக்க இயலாதவாறு தொலைவிற் செல்லினும், ஆடுபவர் தவறியவராவர். பின்பு அடுத்தவர் ஆடுதல் வேண்டும். அடுத்தவரும் தவறின் முன்னவர் மீண்டும் ஆடுதல் வேண்டும். இங்ஙனம் மாறிமாறிக் கடைபோக ஆடுவர்.

முதற்கட்ட ஆட்டு தவறாது முடியின், அடுத்த கட்டமாகிய இரண்டாங் கட்டத்திலும், பின்பு அதற்கடுத்த மூன்றாங் கட்டத்திலும், இங்ஙனமே ஆடுதல் வேண்டும். இரண்டாம் மூன்றாம் கட்டங்களில் ஆடும்போது, கட்டந்தொறும் மிதித்து நொண்டியடிப்பதும், ஒரு கட்டம் இடையிட்டு நொண்டியடிப்பதுமாக இரு வேறு முறையுண்டு. இவற்றுள் ஏதேனுமொன்று முன்னரே முடிவு செய்யப்பெறும். எனினும், பின்னதே பெரும்பான்மை. வட்டைக் காலால் தள்ளுவதிலும், கட்டங் கட்டமாய்த் தள்ளுவதும் ஒரேயடியாய் வெளியே தள்ளுவதும் என இருமுறை யுண்டு.

இடவரிசை முடிந்தபின் வலவரிசை மேலிருந்து கீழாக முறையே ஆடப்பெறும். இடவரிசை வழியாகச் சென்றே அரை வட்டத்தில் நின்று வலவரிசைக் கட்டங்களை முற்கூறிய முறையில் மிதித்தாடுதல் வேண்டும். வட்டு கட்டத்திற்கப்பாற் படுதல் முதலிய ஐங் கவறும், தவறு நேர்ந்தவழி ஆடகர் மாற

# தமிழ் மலர்

## தமிழ் வாழ்த்து

[திரு. புலவர் 'அரசு' பூவிருந்தவல்லி]

அன்னைதன் இனிய பாலோ டகமுற அன்பின் ஊட்டும்
இன்னிசை யுணவா யெம்மோ டியலுற வளர்ந்துள் ளூறிப்
பின்னிய வுயிரா யோங்கும் பெற்றிய தமிழே ! நின்சீர்
மன்னுமிந் நாட்டில் நீடி வழிவழி வாழி ! வாழி !! க

உடனுறை மக்க ளோடு முவப்புட னளவ ளாவ
இடனுறு மொழிதந் நாட்டி லியைந்திடு மொழியே யென்னும்
இடனறி யாதபண்பார் தமிழரே யெனினும் வாடாத்
திடனுறு தமிழ்மா ருமற் சிறப்புடன் வாழி ! வாழி !! உ

என்னுறு மொழி,மற் றென்னை யீன்றவர் மொழி, அன்னார்க்கும்
முன்னுறு மரபி னோர்கள் மொழிந்தியன் மொழிமற் றெற்கும்
பின்னுறு மரபோர் பேசப் பெறுமொழி யாகி யிங்ஙன்
மன்னுறு தமிழ்மா ருமல் வழிவழி வாழி ! வாழி !! ௩

குழலிசை யாழி னோசை குலவுமே ழிசைக லந்து
பழகிய தமிழின் கூத்தும் பண்ணிய லிசையும் வாழி !
உழவர்க ளோசை மாறு வுயர்வளப் பண்ணை சூழ்ந்த
அழகிய தமிழ்நா டென்றும் அணிமணம் நிறைந்து வாழி ! ச

தமிழர்தம் மொழியின் சீர்மை தகவறிந் தோதிவாழ்க !
தமிழர்தந் தலைநி மிர்ந்து தருக்குட னுலாவி வாழ்க !
தமிழர்க ளுழவு வாழ்க ! தமிழர்கள் வணிகம் வாழ்க !
தமிழ்மொழி யுலக மெங்குந் தனியர சேற்று வாழ்க ! ரு

# செய்திகளும் குறிப்புகளும்

**சித்தாந்தப் பேராசிரியர் ந. சிவகுருநாத பிள்ளையவர்களின் எண்பதாவது பிறப்புவிழா :**

தூத்துக்குடி, சித்தாந்தப் பேராசிரியர் திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்களின் எண்பதாம் அகவைப் பிறப்பு விழா மிகவும் சிறப்பாக 25-7-'52-இல் நடைபெற்றது. அவ்வமயம் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையாரால் ஒரு பேரவை கூட்டப்பட்டது. அப் பேரவைக்குத் திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பண்டிதர் திரு. பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள் தலைமை பூண்டார்கள்.

உள்ளூர்ச் சேக்கிழார் கழகம், பாகம் பிரியாள் மாதர் கழகம், திலகவதியார் கழகம், சச்சிதானந்த சபையினர் ஆகியோர்கள் இவ்விழாச் சிறப்பில் கலந்துகொண்டனர். இருபால் பெருமக்களும் ஏராளமாகக் கூடியிருந்தனர்.

வெளியூர்களிலுள்ள பல சபையினர், பல்பெரும் புலவர்கள், செல்வர்கள், நண்பர்கள், மாணவர்கள் ஆகியோரிடமிருந்து வாழ்த்துப் பாக்கள் வணக்கச் செய்திகள் முதலியன அளவிறப்ப வந்துள்ளன. அவையனைத்தும் பேரவையின்கண் படிக்கப்பெற்றன.

திருவாவடுதுறை ஆதீனம் மகாசன்னிதானம் அவர்கள் தங்கள் ஆதீனத் தம்பிரான் காரியக்காரர் வாயிலாக உயர்ந்த பொன்னுடையும், அருட்கொடை (பிரசாதம்) யும் அருளியுள்ளார்கள். மேலும் நல்லாக்கத் திருமுகமும் வழங்கியுள்ளார்கள். தருமபுரம் ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் இவைகளிலிருந்து அருட்கொடையும், நல்லாக்கத்திருமுகமும் பிறவும் வந்து நல்கப்பெற்றன.

தருமபுரம் திருப்பனந்தாள் ஆதீனங்கள், வெளியூர் உள்ளூர் மெய்யன்பர்களால் நல்கப்பெற்ற வெண்பொற்காசுகளைத் தொகுத்துப் பொற்கிழியொன்று பேராசிரியர் அவர்கட்கு வழங்கப்பெற்றது.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் பேராசிரியரவர்கட்கு **"சித்தாந்த முதுபெரும் புலவர்"** என்னும் செம்மை சால் சிறந்த பட்டம் ஒன்றை அன்பார்வமுடன் அளித்தனர். பேரவையில் பதினேழு பெருந்தகையார்க்குத் தக்க பட்டம் அளிக்கப்பெற்றது.

**குறிப்பு :** யாமும் பேரன்புடன் வாழ்த்துகின்றோம். அவர்கள் நெடுநாள் வாழ்ந்து சித்தாந்தம் வளர்த்துத் தொண்டுபுரியச் சிவபிரான் திருவடியை வழுத்துகின்றோம்.

**சென்னைக் கோநகர் தமிழருக்கே :**

திரு. டி. ஆர். வேங்கடராம சாத்திரியாரவர்களின் கருத்து :

"ஆந்திரர்கள் தனியாட்சி வேண்டுமென்று விரும்புகின்றார்கள். இதனைப்பெறுவதற்கு; சென்னை நகரத்தின்மீதுள்ள பொருந்தா மோகத்தை —மயக்கத்தை முதலில் கைவிடவேண்டும். சென்னை நகரம் தமிழரைச் சேரவேண்டும். இது தமிழ் நகரம்.

சென்னை நகரத்தில் தமிழர்களுடன் ஆந்திரர்கள் ஒன்றுபட்டு வாழா விடில் ஒவ்வொரு நாளும் போரும் பூசலும் ஏற்படுவது திண்ணம். இதன் விளைவு மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்றவாறும், மொழிவாரியாகவும் இவர் கள் ஆட் பேறு (பிரதி நிதித்துவம்) கோருவார்கள். மிகச் சூடாகச் சொற் போர் (விவாதம்) இயற்றல் தக்கதன்று" என்பதே.

மத்திய அரசியல் அவையில் திரு. ஏ. ராமசாமி முதலியாரவர்கள் பேசுகையில் ஆந்திர மாகாணம் தனியாகப் பிரிக்கப்பட்டால், சென்னை யில் வாழும் 'ஐம்பது லட்சம் ஆந்திரர்களும் அன்னியராகக் கருதப்படுவர். தமிழர்களுக்கு மனக்கசப்பு ஏற்படாமல் பிரிக்கப்படவேண்டும். சென்னை நகரம் சம்பந்தப்பட்ட வரையில் நகரிலும் முப்பது மைல் சுற்றுவட்டாரத் திலும் உள்ள மிக மிகப் பழைமையான திருக்கோயில்களைப் போய்ப் பார்த்தால் யாருக்கு நகரம் சொந்தமென்பது நன்றாகப் புலப்படும். எல் லாக் கோவில்களின் பெயர்களும் "**திரு**" என்ற எழுத்துடன் தொடங்கு கின்றன. இது தமிழ்ச்சொல். கடலோரத்தில் சில தெலுங்குக் குடிகள் குடியேறியகால் சென்னைநகரம் அவர்களுக்குச் சொந்தமாகிவிடாது என்றனர்.

**இந்தியை விழிப்பாகப் புகுத்தவேண்டும் :**

நெல்லைக் கல்லூரி நிறுவலாளர் நினைவுநாள் விழாவில் தலைமை பூண்ட ராசா. சர். முத்தையச் செட்டியாரவர்கள் பேசிய சுருக்கம் :—

இந்தியை நாட்டின் பொதுமொழியாக நடைமுறைக்குக் கொண்டு வரும் வகையில் மிகவும் விழிப்பாக நடந்துகொள்ளுதல் வேண்டும். இந்தி மக்கள்மீது திணிக்கப்படுவதாகக் கிளர்ச்சி ஏற்பட இடங் கொடுத்தல் கூடாது என்பதே. திராவிடக் கழகத்தார் சூலை 20-ல் திருச்சிக் கூட்டத் தில் இந்தியை எதிர்ப்பதெனமுடிவு செய்தனர்.

**இந்தி எழுத்து அழிப்பு :**

ஆகஸ்டு முதல் நாளன்று ஈ. வே. இராமசாமிப் பெரியார் அவர்கள் உட்பட பலர் இரயில்வே நிலையங்களிலுள்ள இந்தி எழுத்துக்களை அழித் தனர். இதைத் தொடர்ந்து தமிழ் நாடெங்கும் பல தமிழ்ப்பற்றாளர் இந்தி எழுத்துக்களை இரயில்வே நிலையங்களுக்கும், அஞ்சல் நிலையங்களுக்கும் சென்று அழிக்கலாயினர்.

**சென்னைத் திருவள்ளுவர் கழக ஒன்பதாவதாண்டு நிறைவுவிழா:**

இவ்விழா சர். எம். சிடி. முத்தைய செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் 1952 ஆகஸ்டு 2, 3. நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முறையே உயர்திரு. அ. கசபதி நாயகர் B.A., B.L. (Retired District Judge) அவர்களும், சென்னை மாகாணப் பொருளமைச்சர் உயர்திரு. C. சுப்பிரமணியம் அவர்களும் தலைமை பூண்டார்கள். பெரும் புலவர்கள், திரு. K. கோதண்டபாணி பிள்ளை B. A. அவர்கள், திரு. T. S. கந்தசாமி முதலியாரவர்கள் M.A., B.L. திரு. சு. பரமசிவன் அவர்கள், திருமதி. A. R. இந்திராணி அம்மையாரவர்கள் M. A. திரு. R. P. சேதுப்பிள்ளையவர்கள் செவிக்கினிய விரிவுரை நிகழ்த்தினார்கள். தலைவர். திரு. கசபதி நாயகரவர்கள் டாக்டர் திரு. அண்ணாமலை பிள்ளையவர்களால் செந்தமிழ்ச் செல்வியில் வெளிவரும் தமிழ் நெடுங்கணக்கு ஆராய்ச்சியைப்பற்றி மிகவும் பாராட்டிப் பேசினார்கள்.

**சமயமொழிப் பணிபுரியுங் கழகக் கூட்டுறவு:**

திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசலதேசிக பரமாசாரிய சுவாமிகள் தமிழ் நாட்டில் சமயப்பணியும் தமிழ்ப்பணியும் புரிந்து வரும் கழகங்களுக்கு வாழ்த்தும் வளமும் நல்கத் திருவுளங் கொண்டுள்ளார்கள் எனத் தெரிகிறது. கழகங்களின் முகவரியையும் முதன்மையரையும் அறிய விழைந்துள்ளார்கள். அதன்படி அவர்கட்கு அறிவித்துத் தொடர்பு கொண்டு கூட்டுறவாகத் தொண்டு செய்வதே சிறப்புடைத்தாகும் அவ்வாறே செய்யுமாறு கழகங்களை வேண்டுகின்றோம்.

**குறள்வழி நிற்பார்க்குச் சட்டமேன்:**

மதுரை வள்ளுவர் கழகப் பதினோராவது ஆண்டு விழாவில் துவக்கத் தலைவர் திரு. பி. டி. ராசன் எம். எல். ஏ. அவர்கள் வள்ளுவரின் குறளில் வகுக்கப்பட்டுள்ள வாழ்க்கை நெறியைக் கடைப்பிடித்து மக்கள் நடப்பார்களாயின் அவர்களை ஆட்சிசெய்யச் சட்டமே தேவையிராது. பல ஆயிர ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட வள்ளுவர் குறள்மறை மக்கள் வாழ்க்கை நெறியை அறுதியிட்டுக் கூறுகிறது. அஃது எக்காலத்துக்கும் ஒத்தது. அதில் ஏதும் குறைக்கவோ, கூட்டவோ, மறுக்கவோ வழியில்லை. திருக்குறள் வகுப்பு எங்கணும் பெருகவேண்டும் என்றனர்.

**தபால் முத்திரைகளில் தமிழ்க்கவிகளையும் அமைக்க:**

புதிதாக அமைக்கப்பெறும் தபால்தலைகளில் வடநாட்டுக் கவிஞர்களை மட்டும் அல்லாமல் தமிழ் நாட்டுக் கவிஞர்களில் சிலரையும் அமைக்க வேண்டுமென்று பல வேறு ஊர்களில் பல்வேறு கழகங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

**திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு :**

தருமபுர ஆதீனச் சார்பில் சென்னையிலும் அதனைச் சுற்றியுள்ள பல் வேறு இடங்களிலும் பல நாட்களாகப் பல்வேறு தக்கார் தலைமையில் பல் வேறு பொருள்கள் பற்றிப் பல்வேறு பெரும்புலவர்கள் விரிவுரையாற்ற மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றன. தமிழகத்தார்க்கோர் விழிப் புணர்ச்சியையும் நல்கியது. ஆதீனத்தார் அருஞ்செயல் காலத்தொடுபட்ட போற்றற்குரிய பெருந்தொண்டாகும். இவ்வாறு அடுத்தடுத்துப் பல்வே றிடங்களில் ஆற்றுதல் அனைவராலும் வேண்டத் தக்க தொன்றும்.

**ஆவின் கொலைதடுக்க ஆவிவிட்டார் :**

பீகாரில் பசுவதையைத் தடுக்க உண்ணா நோன்பிருந்து உயிர்விட்ட பெரியார் பண்டித ராமச்சந்திர சர்மா. இவர் இருபத்தைந்து நாள் உண்ணா நோன்பிருந்து உயிர் விட்டனர். இவர் ௧ம் அகவை நாற்பத் தைந்து. ஆலயங்களில் விலங்குக் கொலையையும் பசுக் கொலையையும் நீக்கவே மேற்கொண்ட நோன்பைக் கைக்கொண்டார்; ஆவியும் விட்டார். இனியேனும் நாட்டவர் நல்லறிவு பெற்று, கொலை புலை ஒழித்துத் தூயராய் வாழ்வாராக.

**பனிச் சிவலிங்க வழிபாடு :**

அமர்நாத் குகையில் இயற்கைப் பனியுருவால் சிவலிங்கம் அமைந் திருக்கிறதாம். அதைக் கும்பிட மூவாயிரவர்க்கு மேல் வழிநடைத் தொண்டராய்ச் சென்றுள்ளனராம். இறையின் அருட்செயல் இயற்கை என்னே ! இருந்தவாறு.

**இந்தி பற்றிய கேள்வி மறுப்பு :**

மத்திய அரசியல் அவையில் திரு. எஸ் கே. கந்தசாமி எம். பி. அவர்கள் 1. சென்னை ராஜ்யப் பள்ளிகளில் இந்தியை நுழைக்கும்படி இந்திய சர்க்கார் உத்திரவு அனுப்பினார்களா? 2. அப்படியானால் வட இந்திய பள்ளிகளில் ஏன் தமிழ் மொழியைப் புகுத்தக்கூடாது? 3. சென்னையிலுள்ள சகல முற்போக்குச் சத்திகளும் இந்தி எதிர்ப்பு அணி திரட்டுகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

சபாநாயகர்

ஐயா !

தாங்கள் அனுப்பிய மேற்கண்ட கேள்விகளைத் தலைவர் அனுமதிக்க மறுத்துவிட்டார் என்ற தகவலைத் தங்களுக்குத் தெரிவிக்கும்படி உத்தர விடப் பட்டிருக்கிறேன். தங்கள் நன்றியுள்ள, ஒப்பம், சி. எல். குரி, செக்சன் ஆபீசர்.

**புருக்கள் செய்தி கொண்டுவரல் :**

செய்தித்தாள்களின் வேலை நிறுத்தம் காரணமாகக் குளேர்ஸ் கவுண்டி (அயர்) யில் புருக்களின் கழுத்தில் செய்தித் துண்டுகளைக் கட்டி விடுகின்றனர். இது பழங்கால முறை. புருக்கள் செய்திகளைக் கொண்டு குறித்த இடத்தில் பரப்புகின்றன.

**இந்தியர்களை இகழும் சொல் நீக்கப்படல் வேண்டும் :**

நேட்டால் இந்திய காங்கிரசு அறிவிப்பு: ஆங்குள்ள கல்வி அதிகாரி மிஸ்டர் முர்ரேபூப்ஸன் இந்தியரை மதிப்புக் குறைவாகச் சில பகுதிகள் ஒரு புத்தகத்திலிருப்பதால் அவைகள் நீக்கப்பட்டாலன்றி அது பாடமாக வைக்க முடியாதென்று உத்தரவிட்டுள்ளார் என்பதே.

**அஞ்சல் கவர், ரூபா பதினாயிரம் :**

1872-இல் காஸடாரிக் காலிலுள்ள ஜோஸ் என்ற இடத்திலிருந்து பெருவிலுள்ள லிமா என்ற இடத்திற்கு அனுப்பப்பட்ட அஞ்சலுறை ஏலத்துக்கு விடப்பட்டது. ஓர் அமெரிக்கத் துரைமகனார் 10075 ரூபா மதிப்புள்ள டாலர் கொடுத்துப் பெற்றுள்ளார்.

**வரலாற்றுக்காலத்துக்கு முற்பட்ட மனித எலும்புக்கூடு :**

ஸ்ரீ காகுளம் சில்லா நரசிண்ணபேட்டைத் தாலுகா 'உரஜம்' என்ற கிராமத்தில் ஒரு சுடுகாட்டில் இரண்டு ஆண்டுகளுக்கு முன், ஒன்பதடி மனித எலும்புக்கூடு காணப் பட்டதென தெரியவந்ததன்மேல் சென்னைக் காட்சிச்சாலைக் (மியூசியம்) கௌரவ கரஸ்பாண்டாகவுள்ள சில்லாக் கலெக்டர் திரு. என். பகவன்தாசு அவர்கள் போய் ஆராய்ச்சிசெய்து $14\frac{1}{2}$ அடி ஆழம் தோண்டச் செய்தனர். ஏராளமான எலும்புகளும் கிளிஞ்சில்களும் தென்பட்டன. எலும்புகள் தொட்டவுடன் தூளாகின்றனவாம். மண்பானை ஐயாயிர ஆண்டுகளுக்கு முன்னுள்ளதாகக் கருதப்படுவதொன்று கண்டெடுக்கப்பட்டதாம்.

**பிள்ளைப்பேற்று விடுதி :**

கோவையில் **"வலுபாய் வேந்தரவன் பிரசவ விடுதி"** க்குச் சென்னை ஆட்சித் தலைவர் திரு. ஸ்ரீ பிரகாசா அடிப்படைக் கல் நாட்டினார். இது ரூபா. நாற்பதினாயிரஞ் செலவில் கட்டப்படுகிறதாகத் தெரிகிறது.

**229 காரட் வைரக்கல் :**

பன்னாவிலுள்ள வைரச் சுரங்கத்தில் இருநூற்று இருபத்தொன்பது காரட் எடையுள்ள வைரக்கல் கண்டு எடுக்கப்பட்டதாம் அதன்மேல் பச்சை படர்ந்திருக்கிறதாம். இஃது அணிபவர்கட்கு நற்பேற்றை நல்குமாம். கல் இன்னும் செதுக்கப்படவில்லையாம்.

# சித்தாந்த வகுப்பு

## சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம்

### அஞ்சல் வழி

சித்தாந்த மெய்யுணர்வை அன்பர்கள் தத்தம் இருப்பிடங்களிலிருந்தே எளிதாகப் பெறும்வழி அஞ்சல் வாயிலாகக் கற்பது. அதன்படி பல மாணவர்கள் சேர்ந்துவருகின்றார்கள்.

1952 செப்டெம்பர், முதல்நாள் முதல் 1953 ஆகஸ்டு முதல்நாள் முடிய ஒவ்வோரு மாத முதல் நாளிலும் ஒவ்வோரு வெளியீடு வெளிவரும். பன்னிரண்டு வெளியீடுகளில் **"சிவஞானபோதச் சிற்றுரையும்"** அதன் விரிந்த விளக்கமும் காணப் பெறும். ஒரு ஆண்டுக்குள் புத்தகம் முழுவதும் முடியும். 1953 மார்ச் முதற்கிழமை முதல் தேர்வு நடைபெறும். அத்தேர்வில் வெற்றியுற்றார்க்குச் சான்றிதழும் பரிசும் வழங்கப்பெறும்.

அஞ்சற்கூலியுள்பட ஆண்டுக் கையோப்பம் ரூ. **4-0 (நான்கு)** இந் நான்கு ரூபாவையும் **20-8-52**-க்குள் முன்பணமாக அடியிற்கண்ட முகவரிக்கு அனுப்பி வகுப்பில் சேர்ந்துகோள்ளுதல் வேண்டும்.

*விளக்கம் எழுதுபவர் :*

கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர்

**திரு. ப. இராமநாத பிள்ளை அவர்கள்.**

---

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,**

1/140, பிராட்வே, சென்னை - 1.

*திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர் : வ. சுப்பையா.*

Vol XXVI 1951—1952



# செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

இருபத்தாறும் சிலம்பு

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
லிமிடெட்

கர ஆண்டு
௧௯௫௧—௧௯௫௨

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.
Thirunelveli. Madras.

All Rights Reserved] [Price Rs. 6-0-0

'செந்தமிழ்ச் செல்வி'

## இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்

## EDITORIAL BOARD MEMBERS

க. திரு. மகாமகோபாத்தியாய பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி.

உ. ,, 'சித்தாந்த கலாநிதி' வித்துவான், ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், தமிழ் விரிவுரையாளர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

ங. ,, துடிசைகிழார், அ. சிதம்பரனார் அவர்கள், கோயமுத்தூர்.

ச. ,, தி சு. கந்தசாமி முதலியார் அவர்கள், எம். ஐ., வழக்குரைஞர், சாத்தூர்.

ரு. ,, வித்துவான், மு. இராசாக்கண்ணனார் அவர்கள், B.O.L. (Hons.) M.E.S., அரசினர் கல்லூரி, கோயமுத்தூர்.

சா. ,, வித்துவான், பண்டித, கா. பொ. இரத்தினம் அவர்கள், பி. ஏ. (ஆனர்ஸ்), பி.ஓ.எல், அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, கொழும்பு.

எ. ,, 'சித்தாந்த பண்டிதர்' ப. இராமநாத பிள்ளை அவர்கள், கழகப்புலமையாளர்.

# உள்ளுறை


பக்கம்

அருமை உவமை
—திரு. பா. சூரியநாராயணன், B.A., Hons. அக
அருள் விண்ணப்பம்—இனியன் ருகச
அறிவியலும் தமிழாராய்ச்சியும்
—திரு. பி. லூர்துசாமி, பி. எஸ்ஸி., திண்டிவனம் உருரு
அறிவு விளக்கம்—திரு. வித்துவான், கு. சுந்தரமூர்த்தி,
செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள் ருரு உ.
அறுகயிறூசல் (சித்தாந்தச் சிறுநாடகம்) சஅ0
அன்பும் அருளும்
—T. S. நடராசக் குருக்கள், B.A., L.T., ஆசிரியர்,
பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, சிதம்பரம் உசுஎ
இக்கால மாணவன் இயம்புகிறன் (கவிதை)—திரு. புலவர் அரசு ருரு
இது நல்ல சமயம்—திரு. சா. கூர்மாவதாரக்கோன் ருஉச
இயன் மொழி வாழ்த்து—சித்தாந்த வகுப்பு மாணவர்கள் ரு00
இரக்கமொன்று இல்லையாயின் (கவிதை)
—புதுவை, முது கண்ணன் சசஉ
இருபத்தாறும் ஆண்டு—இதழாசிரியர் முகப்பு
இல்வாழ்க்கை—திரு. மா. ரா. இளங்கோவன் அசு
இறை மாட்சி—செல்லூர்க்கிழார் ருசு0
இன் தமிழ்த்தாய்—நெல்லை, திரு. க. சுப்பிரமணியன் ருஎசு
இன்பம்—செல்லூர்க்கிழார் சுருரு
உண்மை வெளிப்படுகின்றது—திரு. சித்தயோகி,
சாமி சுந்தரமகாலிங்கம் அவர்கள் உகஎ
ஊக்க உரைகள்—தமிழ்ப் பெரியார்கள் ருருக
எழில் (கவிதை)—திரு. ப. சூரியநாராயணன், B.A., Hons. உச
எழிற் செல்வர் திருக்குறள் அட்டாவதானம்,
திரு. தி. ப. சுப்பிரமணிய தாசு அவர்கள்—இதழாசிரியர் க0ரு
எழுத்துமாற்றம் திருவைந்தெழுத்தைச் சிதைக்கும்—இதழாசிரியர் ருஎ
ஐயத்துக்கு விளக்கம்
—திரு. துடிசைகிழார், அ. சிதம்பரனுர் சகக
ஒப்புமை—திருக்களிற்றுப்படியார் ருஉஎ
ஒன்றே முக்கால்—திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளை, M.A., B.L. கஎஉ
ஓம் நமசிவய !
—இசைவள்ளல், தஞ்சை, ஆபிரகாம் பண்டிதர்
அவர்கள் க0அ
ஓவியப் புலவர் திரு. அ. செகந்நாதாச்சாரியார்
—இதழாசிரியர் உருசு

கரணம் பிழைக்கின் மரணம்
—வித்துவான், திரு. ந சண்முகசுந்தரன், திருவதிகை ௬௧
கருணாமிர்த சாகரர்
—திரு. ஆ. அ. வரகுணபாண்டியர், தஞ்சை ௧, ௬௫
கல்வி—திரு. ரா. கிருட்டிணசாமி, பீ. காம், தஞ்சை ௩௫
கல்வி நிலையும் தேசிய வாழ்வும்—திரு. சர் ஏ. இலட்சுமண
சாமி முதலியார் அவர்கள் ௧௭௭
கழகத்தலைவர் அறிக்கை
—திரு. மு. காசி விசுவநாதன் செட்டியார் அவர்கள் ௩௬௩
கழற்சிங்கன் யார்?—புலவர், திரு. நல்லொளியன்,
கரூர் ௪௨௯, ௫௫௬
கற்பின் தெய்வம்—வித்துவான், கா. பொ. இரத்தினம்
அவர்கள் B.A. (Hons.), B.O.L. ௨௮௩
குடம்பை எது?
செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை ௧௧௩
கை கொடுத்தருளல்—ஆளுடைய அரசு ௫௩௩
சங்க இலக்கியங்களில் இல்லையா?
—திரு. சு. குமாரஸ்வாமி ஆச்சாரி, M.A., மயிலம் ௪௩௫
சித்தாந்தக் கோமாளி கதை ௪௮௩
சித்தாந்த வகுப்பில் கலந்துகொண்டோர் ௪௮௫
சித்தாந்த வகுப்புப் பயிற்சிச் சான்றிதழ் ௫௦௨
சிலம்பு—செல்லூர்க்கிழார் ௪௩௪
சிவஞானபோதம் தனித்தமிழ் முதல்நூல்—இனியன் ௧௫௯
சிவப்பிரகாசர் செய்யுள் நலம்—சுந்தர குமரன் ௫௦௩
சிறுமியின் இலக்கியச் சிந்தனை
—செல்வி, எஸ். கமலாதேவி, இரத்தினபுரி ௧௨௩
செந்தமிழ் வேட்கை
—செல்வி. எஸ். கமலாதேவி, இரத்தினபுரி ௨௪௧
செம்பொருட்டுணிபு (சித்தாந்தம்)—இதழாசிரியர் ௫௦௭
செம்பொருள் துணிவாம் சைவசித்தாந்த அடிப்படைக்
கொள்கைகள்—இதழாசிரியர் ௪௫௧
செய்திகளும் குறிப்புக்களும் ௫௩, ௧௦௩, ௧௫௨, ௧௯௭, ௨௫௫,
௩௦௫, ௩௬௨, ௪௦௧, ௪௪௯, ௫௪௦, ௫௮௧
சைவசித்தாந்தத்தின் தொன்மை—
—டாக்டர், தி. இரா. அண்ணாமலைப் பிள்ளை,
L.C.P.S., M.S.S A. Lond. திருக்குற்றாலம், தென்காசி ௫௨௮
தமிழ் இசை—செல்லூர்க்கிழார் ௪௨௦
தமிழ் எழுத்து மாற்றம்—இதழாசிரியர் ௧௦
தமிழ் எழுத்து மாற்றம்!—பண்டித புலவ வித்துவ,
ஞா. தேவநேயன், எம். ஏ. ௧௪௫

தமிழ் ஐ. ஔ. எழுத்துக்கள்
—திரு. கா. அப்பாத்துரை, எம்.ஏ., எல்.டி. ௩0௧
தமிழ்த்தாய்க் கொலை—கணியர், டாக்டர், திரு.
இ. மு. சுப்பிரமணிய பிள்ளை ௧௮, ௧௬௧, ௨0௬
தமிழ்நாட்டு விளையாட்டு—திரு. ஞா. தேவநேயன், எம்.ஏ.
௨௫௧, ௫எ௫
தமிழ் நெடுங்கணக்கு—பெயரும் எண்ணும்—இராவ்சாகிப்,
சைவப்புலவர், டாக்டர், தி. இரா. அண்ணாமலைப்
பிள்ளை L.C.P.S., L.M.S.S.A., (Lond) திருக்
குற்றாலம் (தென்காசி) ௬எ, ௧௩எ, ௧௮௫, ௨௮௬, ௫எ௧
தமிழ்மலர் (கவிதை)—திரு. புலவர் அரசு,
பூவிருந்தவல்லி ௫௮0
தரணியாள் தமிழே (கவிதை)—நாஞ்சில், கா. கணபதி ௨௭௬
திரு உந்தியார்—திரு. வித்துவான், ந. சேதுரகுநாதன் ௫௨௬
திருக்குறட் கவிதைக்கேணி
—தருமை, திரு. சொ. சிங்காரவேலன் ௬௧
திருக்கோவையார்—வித்துவான், பாலூர், D. கண்ணப்ப
முதலியார் ௨௨௩, ௨எ௫
திருப்புறம்பயம்—திரு. T. V. சதாசிவ பண்டாரத்தார் ௧௬௩
திருவரங்கத் தந்தாதி—திரு. சுந்தரகுமரன், புதுவை ௩௮௫
தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம் அறிக்கை ௫௩௬
தென்னிந்திய தமிழ்ச் சங்கம் தமிழ்ப் புலவர் மாணவர் தேர்வு ௭௭
தென்னிந்திய தமிழ்ச்சங்கம் புலவர் மாணவர் தேர்வுத் தகுதி
விளக்கம் ௫௩௫
தென்னிந்திய தமிழ்ச்சங்கம் புலவர் மாணவர் தேர்வு முடிவறிக்கை ௫௩௭
தேனீப்பத்து (கவிதை)—தேனீ வெருஉத் தலையார் ௨௬௫
தொல்காப்பியத்தின் பழமை—வித்துவான், திரு. ந. சண்மு
கசுந்தரன், திருவதிகை ௧௨௬
நாடு—செல்லூர்க்கிழார் ௩௬௬
நாற்கவிராயர், சு. நல்லசிவன் பிள்ளை அவர்கள்
—பெருநாவலர், திரு. பு. சி. புன்னைவனநாத
முதலியார் ௩௬எ
நான் கண்ட புலவர் பெருமக்கள்
—திருவாளர், சித்தாந்தப் பேராசிரியர்,
ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் ௩௬எ
நீலகேசி-வித்துவான், திரு. வே. சிவசுப்பிரமணியன், மயிலம் எ௫
நீள் சுவை விருந்து
—தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தார் ௭௬௫
நூல்நிலையம்—இதழாசிரியர் ௫௨, ௨0௧
நெல்லை அருணகிரி இசைக்கழக முத்தமிழரங்கக் காட்சி ௭௬௬

**நெல்லைச் சித்தாந்த வகுப்பு**—*இதழாசிரியர்* ௪௦௩
**நெல்லைச் சித்தாந்த வகுப்பு நன்கொடையாளர்கள்** ௫௦௫
**நெல்லைச் சித்தாந்த வகுப்பு நிகழ்ச்சிகள்** ௪௬௭
**நெல்லைச் சித்தாந்த வகுப்பு வரவு செலவு கணக்கு** ௫௦௬
**பண்டித, வித்துவான், சங்குப்புலவர்**
*—திரு. வித்துவான், சி. இராமசாமி, வத்தலக்குண்டு* ௪௨௭
**பத்துப்பாட்டிற் பறவைகள்**
*—செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை* ௩௨௩, ௩௭௭
**பத்துப்பாட்டின் பண்பு**
*—வித்துவான், பாலூர் D. கண்ணப்ப முதலியார்* ௩௧௯
**பத்துப்பாட்டு**
*—வித்துவான், திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., பி.எல்.* ௩௪௭
**பத்துப்பாட்டு மாநாடு** (*திறப்புரை*)
*—இராவ்சாகிப், சித்தாந்த சைவப்புலவர், டாக்டர், தி. இரா. அண்ணாமலைப் பிள்ளை* L.C.P.S., L M.S.S A. Lond. *திருக்குற்றாலம் (தென்காசி)* ௩௩௭
**பத்துப்பாட்டு மாநாடு**—*இதழாசிரியர்* ௩௦௭
**பத்துப்பாட்டும் கல்வெட்டுக்களும்**
*—திரு. T. V. சதாசிவ பண்டாரத்தார், அண்ணாமலை நகர்* ௩௧௨
**பத்துப்பாட்டும் நன்னெறியும்**
*—கழகப்புலவர், சித்தாந்தபண்டிதர், ப. இராமநாத பிள்ளை* ௩௩௧
**பத்துப்பாட்டும் நாட்டின் வளனும்**
*—வித்துவான், திரு. வேத. தாவீது நாடார்* ௩௧௫
**பத்துப்பாட்டும் வானநூலும்**
*கணியர், டாக்டர், இ. மு. சுப்பிரமணிய பிள்ளை* ௩௮௨
**பயனில் மூப்பு**—*வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனார், மயிலம்* ௩௯௧
**பாராட்டு வாழ்த்துப் பாமாலை**
*—தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தார்* ௪௯௮
**புதியன புகுமேல்!**—*செல்வி.* C. *தேவி,* M. Sc. *நாகர்கோவில்.* ௫௯௩
**புலவராய்ப் புலவர்ப் போற்றிய புரவலர் திரு. அ. முத்துசாமிக் கோனார் அவர்கள்**—*இதழாசிரியர்* ௧௫௩
**பூம்புகார்**
*—டாக்டர், திரு. மா. இராசமாணிக்கம்,* M.A.,L.T., M.O.L., PH.D. ௫௯௫

பெரும் புலவர், கா. ர. கோவிந்தராச முதலியார்
—இதழாசிரியர் ருசஎ
பொருட்பெண்டிர்
—வித்துவான், திரு. கே. குஞ்சிதபாதனார், மயிலம் சசங
மகிழ்ச்சிப் பொங்கல்! (கவிதை)—முத்தமிழ்மணி உ0எ
மதிப்புரை ருசு, க0ச, கருக, கசுசு, ஙசுஉ, ச00, சசஅ
மழையும் அழிந்தும்—திரு. கே. நாராயணன் எஉ
மறவாதே (கவிதை) தி. ச. வாசுதேவன் ஙஅச
மறைந்த மணி
-திரு. தி. வே. நடேசன், அண்ணாமலைநகர்
ச0, கஙச, உசுங
மனச்சான்று—இனியன் சுச
மாண்புறு மணிவிழா—விழாச் செல்வர் உருஎ
மாபெருந் தமிழ்ப்புலவர் சரவண பிள்ளை
—திரு. ஆர். வி. கிருஷ்ணய்யர் கச
மெய்கண்டான் நூற்கரு சசுசு
மெய்யுணர் முனிவர்
—சித்தாந்த பண்டிதர், கழகப்புலவர், ப. இராமநாத பிள்ளை உசஎ
மேற்புலத்தறிஞர் கண்ட தமிழகம்
—திரு. வரத. வீரப்பன், புதுவை உரு
வடமொழி எழுத்து—செல்லூர்க்கிழார் கங
வரவேற்பு இதழ்
—திரு. சி. கிருஷ்ணன், வீரவ நல்லூர் ஙசுக
வரவேற்பு மலர்
—தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தார் சசுஎ
வரவேற்பு மலர்—நெல்லை அருணகிரி இசைக்கழகத்தார் ரு0க
வள்ளுவர் நல்கும் சமயவாழ்வு
—சாத்தூர், திரு. தா. சு. கந்தசாமி முதலியார் அவர்கள் எம்.ஏ. சரு
வாய்மை—செல்லூர்க்கிழார் சசஎ
வாழிய தமிழே! (கவிதை)—திரு. க. முத்துக்குமாரசாமி கஎ
வாழியவே! (கவிதை)—நாஞ்சில், கா. கணபதி சு0
வாழ்மொழிவிடுதலை வழங்குவீர் (கவிதை)—மதியன் கசுசு
விண்ணப்பம் ஒன்று—திரு. சோ. கு. மதுரைநாயகம் ருகஉ
விருந்துப்பாடல்—சி. ச. அருணாசலம் சசுச
வில்லுப்பாட்டு சஎஎ

# படங்கள்


| | பக்கம் |
|---|---|
| ஓம் நமசிவய (சிவவாக்கியர்) | ௧0௮ |
| ஓவியப்புலவர், அ. செகந்நாதாச்சாரியார் | ௨௫௬ |
| சித்தாந்த வகுப்புத் திருக்காட்சி | ௪௬௭ |
| சிவவாக்கியர் பாடல் விளக்கப்படம் | ௫௮ |
| திரு. அ. முத்துசாமிக் கோனுர் அவர்கள் | ௧௫௩ |
| திருக்குறள் அட்டாவதானம் திரு. தி. ப. சுப்பிரமணிய தாச அவர்கள் | ௧௬0 |
| தேவார திருவாசக நடனக் காட்சிகள் | ௪௭௨ |
| நெல்லைச் சித்தாந்த வகுப்பு | ௫௫௧ |
| பத்துப்பாட்டு மாநாடு | ௩௭ |
| பாகனேரித் தமிழ்ப்புரவலர், வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் | ௩௬௩ |
| பேராசிரியர், கா. ர. கோவிந்தராச முதலியார் அவர்கள் | ௫௪௭ |
| மாணவர்மன்றம் காப்பாளர்: புலவர் மயிலை, சிவமுத்து ; தலைவி : டாக்டர், தருமாம்பாள் | ௨0௧ |
| லலிதா அம்மையார், விமலா, சரசுவதி | ௪௭௩ |
| வாலாசாபாத்து இந்துமத பாடசாலையின் ௩௬-ம் ஆண்டு நிறைவு விழா | ௪0௩ |

# கழகப் புதிய வெளியீடுகள்

**கழக ஆங்கிலத் தமிழ்க் கையகராதி:**
**(Kazhagam English-Tamil Pocket Dictionary)**

ஆசிரியர்: கா. அப்பாத்துரை, எம்.ஏ., எல்.டி.

*உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்க்குப் பயன்படும் வகையில் எழுதப்பட்டது. ஆங்கிலச் சொற்களுக்கேற்ற தனித்தமிழ்ச் சொற்கள் பல நிறைந்தது. கையடக்கமான உயரிய பதிப்பு. 600 பக்கங்கள் கொண்டது.* ரூ. 3 4 0

**விவேகசிந்தாமணி — மூலமும் உரையும்:**

*சிறந்த அறவுரைகள் பொதிந்து சிலேடைநயம், உவமை நயம், காதல் முதலியன நிறைந்த இந்நூல்,* **கழகப்புலவர் செல்லூர்க்கிழார், செ. ரே. இராமசாமி பிள்ளை** *அவர்களின் தெள்ளிய உரையுடன் முதற் பாகம் வெளிவந்துள்ளது. இதன்கண் நூற்றுமுப்பத்தைந்து பாடல்கள் உள்ளன. இரண்டாம் பாகம் விரைவில் வெளிவரும்.*

**அழகிய இருவண்ண அட்டையுடன் அமைந்தது** ரூ. 0 10 0

**உயர்தரக் கட்டுரை இலக்கணம் II:** ஞா. தேவநேயன் எம். ஏ.

*கட்டுரை வரைவதற்கேற்ற இலக்கணக் குறிப்புக்கள் பலவும் தெளிவாக விளக்கப்பெற்ற புதிய இலக்கண நூலில் இஃது இரண்டாம் பகுதி. மரபியல், கட்டுரையியல் ஆகிய இரு வியல்கள் இதன்கண் விளக்கப்பட்டுள்ளன. மாணவர்க்கேற்ற பயிற்சிகள் பல தரப்பட்டுள்ளன.* ரூ. 2 8 0

**வாழும் வகை:** கா. அப்பாதுரைப் பிள்ளை, எம்.ஏ., எல்.டி.

*"பொருட் செல்வத்தை ஈட்டுதல், ஈட்டிய பொருளைப் போற்றுதல், பின்னர்ப் பயன் தெரிந்து அதனைச் செலவழித்தல் ஆகிய பண்புகள் இந்நூலில் இனிது விளக்கப்பெற்றுள்ளன. இஃது அரியதொரு வாழ்க்கைக் களஞ்சியம். ஒவ்வொருவரும் கற்றுப் பயன்பெறவேண்டிய சிறந்த நூல்.*

**அழகிய இருவண்ண அட்டையுடன்** ரூ. 2 0 0
**கலிக்காக்கட்டு** ரூ 3 0 0

**வருங்காலத் தலைவர்கட்கு:** கா. அப்பாத்துரை, எம்.ஏ., எல்.டி.

*இது நாட்டுமக்கள் இளம்பருவமுதல் பயிற்சிபெற வேண்டிய ஒழுகலாறுகளைப் படிப்படியாக விரித்து விளக்கும் அரிய பெரிய நூல்: இதன்கண் 'விளையாட்டுவிழாச் செல்வருக்கு' என்னும் தலைப்புமுதல், 'வாழ்வு தொடங்கும் இளைஞருக்கு' என்னும் தலைப்புவரை 20 பகுதிகளாக விரித்தெழுதி ஆங்காங்கே மேல்நாட்டுப் பேரறிஞர்களின் கருத்துக்களோடு வெளிவந்துள்ளது. நாட்டுமக்களும் இளைஞர்களும் கற்று நலம்பெறத் தகுதிவாய்ந்த நூல். அழகிய அட்டையுடன் அண்மையில் வெளிவந்துள்ளது.* ரூ. 1 8 0

பதிவு எண் **M. 4899.**

# தமிழன்பர்கட்கு வேண்டுகோள்

கழக வழி வெளிவரும் உயர்ந்த இலக்கியத் திங்கள் வெளியீடான 'செந்தமிழ்ச் செல்வி' ஆடி இதழுடன் ௪௯-ம் சிலம்பு முடிகிறது. அடுத்துவரும் ஆவணி இதழ் ௫௰-ம் சிலம்பின் முதற் பரலாகும்.

தமிழ்மொழி வளர்ச்சிக்குச் செல்வி ஆற்றிவரும் தொண்டு யாவருமறிந்ததே. சிந்தனையாளர், ஆராய்ச்சி யாளர், எழுத்தாளர், சொற்பொழிவாற்றுவோர், பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையில் பட்டம் பெறுவோர் அனை வருக்கும் சிறந்த கருவூலமாகவும், இலக்கியக் களஞ்சிய மாகவும் நிலவிவரும் செல்வி ஒவ்வொருவர் வீட்டிலும் பொன்னேபோல் வைத்துப் போற்றத்தக்கது என்பது அறிஞர் கண்ட முடிபு.

எனவே, இதுகாறும் செல்வியின் வளர்ச்சிக்குத் துணை புரிந்து வந்த தமிழன்பர்கள் மேலும் இதன் ஆக்கத்திற்குப் பல்லாற்றானும் துணைபுரிவார்கள் என நம்புகிறோம். அன்றி யும் செல்வியின் அடுத்த ஆண்டின் ஆண்டுக் கையொப்பத் தொகையை முன்னரேயே அனுப்பி உதவுவதுடன், தம்தம் நண்பரையும் செல்வியின் உறுப்பினராக்கித் தமிழ் வளர்ச்சியி லீடுபட வேண்டுமென வேண்டிக்கொள்கிறோம்.

ஆண்டுக் கையொப்பத் தொகை உள்நாடு ரூ. 4 0
வெளிநாடு ரூ. 4 8

ஆசிரியர்.
"செந்தமிழ்ச் செல்வி"

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,**
***1/140, பிராட்வே, சென்னை-1.***

அட்டார் அச்சகம், சென்னை-1.